கற்பக தீபம்

10வது ஆண்டு சிறப்பு மலர் - 2015

2005 - 2015

வெளியீடு - 2016

யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு
நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச்
சங்கம் வரையுள்ளது

Green BANKING
yes
YOUNG EFFECTIVE SAVER
In Commemoration of World Children's Day,
we offer the children of our nation
Valuable Gifts to
expand their horizon
Isuru Udana
Deposit Rs. 5,000/- or more in a new or existing 'Isuru Udana' account and win 500 Kids Learning Laptops especially designed for your education.
Sisu Udana
When you deposit Rs. 5,000/- or more in your 'Sisu Udana' account you can win 750 valuable Language Companions that have the facility to translate among Sinhala, English and Tamil languages.
www.peoplesbank.lk
PEOPLE'S BANK

கற்பக தீபம்

யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் வரைவுள்ளது

10 ஆவது ஆண்டு சிறப்பு மலர் 2005 – 2015

வெளியீடு
யாழ் மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவு சங்கம் (வ/து)
இல. 52, சோமசுந்தரம் வீதி,
சுண்டுக்குளி ,
யாழ்ப்பாணம் .

மலர் விபரம்

மலர் பெயர்	:	கற்பக தீபம்
தொகுப்பு	:	மலர்குழு
பதிப்புரிமை	:	யாழ் மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவு சங்கம் (வ/து)
பதிப்பாண்டு	:	2016
தொகுப்பாசிரியர்கள்	:	திரு. வ. சிவகுமார் கல்வி உத்தியோகத்தர் திரு. நி. பொ. யேசுராசா பொதுமுகாமையாளர் கோண்டாவில்
முகப்பு படம் வரைபு	:	திரு பா. சித்திரவடிவேலு வேலணை ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கம்.
அச்சுப்பதிப்பு	:	அம்சா பதிப்பகம், இல. 8, அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

அருளாசிச் செய்தி

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமசாரிய சுவாமிகள்
நல்லை குருமகா சன்நிதானம்.

யாழ்மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம் தனது 10 ஆவது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். மனித வாழ்வின் வளர்ச்சிக்கு இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட இயற்கை வளங்களாகிய பனை தென்னை மரங்கள் ஆகும். அவற்றில் யாழ் மாவட்டத்துக்கு மனித தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கின்ற நிலையில் பனையும் தென்னையும் உள்ளது. அடியில் இருந்து நுனி வரை எல்லாப்பாகங்களுமே நீடுழி வாழ்வுக்கு களம் செய்கின்றது. இதனை பாதுகாக்க வேண்டியதும் பராமரித்து பயனளிக்க வேண்டியதும் அனைவரதும் கடமை ஆகும் இப்பாதுகாப்பு பணியில் 10 ஆண்டுகள் சேவையாற்றும் அனைவரையும் பாராட்டுகின்றோம். பனை மரங்களையும், தென்னை மரங்களையும் பாதுகாத்து உயிர்களின் தேவைக்கு பயன்படுத்துவோமாக, 10 ஆண்டுகளை நிறைவு செய்து கற்பக தீபம் என்னும் மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இப்பணிக்கு உழைத்த அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆசிச் செய்தி

பேரருட்திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

"உங்கள் ஒளி மனிதர் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற் செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையை போற்றுவார்கள்" மத் 5:16

"கற்பக தீபம்" எனும் மலர் மலருகின்றது இத்தருணத்தில் இம் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மனிதனும் அவனுடைய வாழ்வின் தன்மைகளும் நாளுக்கு நாள் துரித வளர்சி காணும் மாறுபட்ட உலகில் நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்வு நடத்துகின்றவர்களாகவும் மனிதன் தனித்து வாழ முடியாது என்னும் பொது உண்மைக்கு ஒப்ப மனிதன் சக மனிதர்களோடும் ஒன்றித்து வாழவும்அடிப்படையில் அழைப்பு பெறுகின்றான்.

நீங்கள் உலகிற்கு ஒளி, நீங்கள் உலகிற்கு உப்பு எனும் வாழ்வு தரும் வார்த்தைகள் எம் வாழ்வில் உண்மை அர்த்தம் பெறவும் மெழுகானது தன்னை உருக்கி ஒளிகொடுப்பது போல எம் வாழ்வு பிறருக்கு ஒளி கொடுக்கவும் ஒளியின் மக்களாக கிறிஸ்து ஆண்டவரைப் போல எப்பொழுதும் நன்மையே செய்து கடவுளுக்கு புகழ் சேர்க்க இறையாசீர் நல்கி உங்கள் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துச் செய்தி

கௌரவ பொ. ஐங்கரநேசன்,
அமைச்சர் விவசாய, கமநல சேவைகள்,
கால்நடை, கூட்டுறவு, அபிவிருத்தி,
உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்பாசனம்,
மற்றும் சுற்றாடல் அமைச்சு, வடமாகாணம்.

நந்தாத தீபம்

யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக கற்பக தீபம் மலர் வெளியிடப்படுகின்றது.

பனை எங்கள் பண்பாடு. பனை எங்கள் பொருளாதாரம், பனை எங்கள் சூழல் என்று யாவுமாகி நிற்கும் கற்பகதருவான பனை மரத்தின் உற்பத்திகள் நுகர்வதற்கேற்ற வகையில் மக்களிடையே கொண்டு சென்று சேர்ப்பிப்பவர்கள் பனைசார் உற்பத்தித் தொழிலாளார்களும் இவர்களது கூட்டுறவு அமைப்புக்களில் சேவையாற்றிவரும் பணியாளர்களுமே. இதனால் இயற்கையை நேசிப்பவன் என்ற வகையில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களும் சங்கங்களின் பணியாளர்களும் என்றுமே எனது பெரு விருப்பிற்குரியவர்களாக உள்ளார்கள்.

பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் வெளியிடும் கற்பக தீபம் இதழ், நந்தாத தீபமாக வெளிச்சம் பாய்ச்சவும் அந்த வெளிச்சத்தில் பணியாளர்களின் வாழ்வு வளம் பெற்றுப் பிரகாசிக்கவும் இவர்களின் சிறப்பான சேவையால் பனைத் தொழில் மேன்மேலும் செழித்தோங்கவும் இயற்கை என்ற பேரிறைவன் அருள் பாலிப்பானாக.

வாழ்த்துச் செய்தி

திருமதி. மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடமாகாணம்.

கூட்டுறவு ஊழியர்களின் நலன் சார்ந்த விடயங்களை மேற்கொள்வதற்காக 2005 ம் ஆண்டு 600 க்கும் மேற்பட்ட கூட்டுறவு ஊழியர்களை உறுப்பினராகக் கொண்டு யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன் புரிக் கூட்டுறவுச் சங்கம் என்ற நாமத்தோடு ஆராம்பித்து இன்று தனது 10வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு "கற்பக தீபம்" என்ற மலரினை வெளியிடுவதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சங்கமானது உதவு நிதிக் கொடுப்பனவு, உயர் கல்வி நிதிக்கொடுப்பனவு, புலமைப்பரிசில் கொடுப்பனவு, வைத்திய நிதிக் கொடுப்பனவு வழங்குதல் போன்ற பல்வேறு சேவைகளை ஊழியர்களுக்கு வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டாலும் தனது வளர்ச்சிப்போக்கில் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வு பெற்ற உறுப்பினர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை செய்ற்படுத்தி வருகின்றமை அதன் வளர்ச்சிப்போக்கை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இவ்வாறான பணிகளை வழங்குவதன் மூலம் ஊழியர் நலன்புரி சங்கத்திற்கான கடமைகளை நிறைவேற்றி வருவதுடன் இனிவரும் காலத்தில் இதன் செயற்பாடானது நவீனத்துவங்களை உள்வாங்கியதாக வளர்ச்சி காணவேண்டும் என வாழ்த்துவதுடன் பணியாளர்களின் தகைமை மேம்பாட்டிற்கும் அவர்களது தொழிற்பாதுகாப்பிற்கும் உதவி வழங்கும் ஒரு கூட்டுறவுச்சங்கமாக செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பணியாளர்களால் பணியாளர்களுக்காக உருவாக்கப்பட்ட இக் கூட்டுறவுச் சங்கமானது மேலும் பல அங்கத்தவர்களை இணைத்து நீண்டு நிலைத்திருக்க என் வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. பொ. மோகன்
கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்.
கூட்டுறவு திணைக்களம்
யாழ்ப்பாணம்.

இலங்கையின் வட புலத்திலே யாழ்ப்பாண மாவட்டத்திலேயே பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. இந்தச் சங்கங்களில் கடமையாற்றுகின்ற பல நூற்றுக்கணக்கான பணியாளர்களின் அயராத உழைப்பினாலேயே பனை தென்னை வள உற்பத்தி வல்லுநர்கள் தமது உற்பத்திகளை மிகவும் கௌரவமாக உற்பத்தி செய்து வருகின்றனர்.

அந்த வகையில் இத்தகைய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டிக்காத்து வரும் இப் பணியாளர்கள் தங்களின் சேமிப்புத்திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் தமது தொழிற்பாதுகாப்பினைப் பேணிக் கொள்வதற்கும், தமக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் உருவாகியுள்ள சட்டரீதியான இந்த அமைப்பு இன்று 10 வருடங்களை தனது சேவையில் நிறைவு செய்கின்றதையிட்டு மிகவும் மன மகிழ்ச்சி அடைகின்றேன். எனது மனநிறைவான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் மேற்கொள்கின்ற வேலைகளிலே எமக்கு மன நிறைவினைத் தருகின்ற சம்பவங்களாகவும் மனதிற்கு மகிழ்ச்சியை அதிகளவில் ஏற்படுத்துபவையாகவும் இவ்வாறான அமைப்புக்களே திகழ்கின்றன. ஏனெனில் இவற்றின் நிறைவான சேவைகளை நாம் அவதானிக்கின்றபோதுதான் எம்மை அறியாமலே ஒருவகை மகிழ்ச்சி உணர்வு எம்மை ஆட்கொள்கின்றது.

அங்கத்தவர்களிற்கு நிறைவான சேவையைத் தொடர்ச்சியாக இடையூறின்றி வழங்கி வரும்போதுதான் இத்தகைய நிகழ்வுகளை வெற்றிகரமாகக் கொண்டாட முடிகின்றது. ஆகவே இன்றைய இந்தப் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும் இதனையே காட்டுகின்றது. நிகழ்வு வெற்றிபெறவும் சங்கத்தின் செயற்பாடுகள் மேலும் வளர்ச்சியடையவும் எனது ஒத்துழைப்பு தொடர்ந்தும் தங்களிற்கு இருக்கும் என்பதனை உறுதியாக கூறிக்கொள்கின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு.நா.கணேசன்
தலைவர்
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவின் மூலம் தமது தேவைகளை எளிதாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் 2005ம் ஆண்டு உருவாக்கிய யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கமானது இன்று 10வது ஆண்டை நிறைவு செய்து வெற்றிகரமாக செயற்பட்டுக கொண்டிருப்பதை கண்டு பேரூவகை அடைகின்றேன்

இப் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கமானது நலத்திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்துச் செல்கின்றது. இவற்றில் முக்கியமான ஓர் உன்னதமான திட்டமாக ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தம்மால் இயன்ற நிதி உதவி வழங்கி இத்திட்டத்திற்கு வலுச்சேர்த்த சகல பனை தென்னை வளஅபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகத்தினரும் பாராட்டுக்குரியவர்கள்.

மேலும் இச் சங்கம் உருவாகி 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள "கற்பக தீபம்" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

வாழ்த்துச் செய்தி

திரு.க. சுதாகரன்
தலைவர்
யாழ்மாவட்ட பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின்
பணியாளர் நலன்புரிச் சங்கம்

யாழ்மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கமானது 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு "கற்பக தீபம்" நூல் வெளியிடப்படுகின்றது.

பல்வேறு சமூக ஒடுக்குமுறைகளுக்கும் சுரண்டல்களிற்கும் உட்பட்ட பனந்தொழிலாளர்களின் சமூக பொருளாதார மீட்சிக்காக உருவாக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் ஆராம்பிக்கப்பட்ட நோக்கத்தை அடைந்து வரும் வேளையில் அவ் நிறுவனங்களின் நோக்கத்தையும் இலக்கையும் எய்துவதற்காக பாடுபடுகின்ற பணியாளர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இச் சங்கம் 10வது ஆண்டு நிறைவின் போது பல்வேறு நலதிட்டங்களுடன் ஓய்வு கால உதவுதொகைத் திட்டத்தையும் உருவாக்கி செயறபடுத்தி வரும் வேளையில் "கற்பக தீபம்" நூல் வெளியிடுவதில் இச்சங்கத்தின் தலைவர் என்ற வகையில் பெருமை கொள்கின்றேன்.

மேலும் இச்சங்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் நிதியுதவிகள் செய்ததுடன் தொடர்ந்தும் உதவுகின்ற ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

"வாழ்க கூட்டுறவு வளர்க பனை தென்னை வளம்"

வாழ்த்துச் செய்தி

திரு.செ. செல்வராசா
தலைவர்
ப.தெ.வ.அ.கூ.ச கோண்டாவில்
வலி.ப.தெ.வ.அ.கூ.ச வலி கொத்தணி மானிப்பாய்

கூட்டுறவு அமைப்பு ஒரு புனிதமான அமைப்பாக உலக நாடுகளில் வெகு சிறப்பாக செயற்பட்டு வருகின்றமைக்கு அதன் செயற்திறனே காரணமாகும். அது போல பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள் 1972ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையான 44 ஆண்டு காலத்தில் பாரிய சாதனைகளை படைத்துள்ளமை பாராட்டுக்குரியதாகும் சமூக மக்களை சமூக பொருளாதார வளம் மிக்கவர்களாக மாற்றுவதில் இச் சங்கங்கள் பெரிதும் உதவுகின்றமை பாராட்டுக்குரியதே.

மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களுக்கு மாவட்ட ரீதியாக ஒரு சங்கம் ஆரம்பிக்க வேண்டும் என சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்கள் ஒன்று கூடி நீண்ட நாள் முயற்சியின் பயனாக 2005ம் ஆண்டு சங்கம் உருவாக்கப்பட்டு சிறப்பாக செயற்பட்டு பத்து ஆண்டுகள் கடந்த நிலையில் ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் அளவுக்கு உயர்வடைந்துள்ளதை பெருமையுடன் பாராட்டிக்கொள்கின்றேன். மேலும் இச்சங்கத்தின் 10 வது ஆண்டு நிறைவு பெற்றமைக்காக "கற்பக தீபம்" மலர் வெளியிடப்படுவதும் இச்சங்கத்தின் உயர்வை காட்டுகின்றமை பெருமைக்குரியதே.

தலைவரின் வாழ்த்துரை

திரு.க.துரைசிங்கம்
தலைவர்
தென்மராட்சி பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
கொத்தணி, வரணி

பனை வளம் பெருகி வளமுடன் வாழ்க

நாட்டுயர்வுக்கான பனைத் தொழில் வல்லுனர்கள் ஒன்றுபட்ட பிரதேசங்களில் முதன்மையானது எமது பிரதேசம் ஆகும் எமது பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவு பெற்றமையை முன்னிட்டு கற்பக தீபம் எனும் பெயரில் மலர் வெளியிடுவதனூடாக நாம் பெருமையடைகின்றோம்.

"நினைத்துனை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்வர் பயன் தெரிவார்" என்பது திருக்குறள். சங்கப்பாடல்கள் மட்டுமன்றி பிற்பட்ட காலங்களிலும் பனைபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு கூட்டுறவுக்கு வலு சேர்க்கப்பட்டுள்ளது. அன்றைய சம்பவங்கள் தான் இன்று வரலாறாக உள்ளது. அது போன்று இன்றைய சம்பவங்கள் நாளைய வரலாறாக இருக்கும் என்பதில் ஐயமில்லை முன்பு இருந்தது போன்று தென்கிழக்கு ஆசியாவிலே மிகவும் சிறந்த கூட்டுறவு ஸ்தாபனமாக எமது சங்கம் தொடர்ந்து இயங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

புயலையும் தாங்கி நிற்கவல்லது பனைமரம். அதுபோல் எமது பணியாளருக்கும் அங்கத்தவர்களுக்கும் எந்தத் துன்பம்

வந்தாலும் தோள் கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை. "பனையை நடுவோம். பயனைப் பெறுவோம்" என்றார் வள்ளல் மில்க்வைற் கனகராஜா அவரின் கருத்திற்கிணங்க இலங்கையில் பனைமரம் அழிப்பதைத் தடுக்கும் சட்டம் 27.10.1993 ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை மாபெரும் திட்டமாகும்.

அடக்கு முறைகளுக்கு அடிபணியாமல் கூட்டுறவுச்சங்கங்களின் உறுப்பினர்களினது பொருளாதார கலாசார கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் கூட்டுறவு தலைவர்கள், முகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் கற்பக தீபம் மலர் வெளியீட்டிற்கு உதவி புரிந்த பெரியோர்கள் ஆக்கங்களை தொகுத்து அழகு சேர்த்தவர்கள் இம் மலரை வடிவமைத்து உருவாக்கிய இதழ் ஆசிரியர்கள் நூலாக்க குழுவினர்கள் உளரீதியாக பலம் சேர்த்த நண்பர்கள் அனைவருக்கும் தலை சாய்ந்து எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

வாழ்த்துச் செய்தி

திரு.சி. சிவகுமார்
தலைவர்
வடமராட்சி
ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி

யாழ் மாவட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் ஒன்று சேர்ந்து தமது நலன் சார்ந்த விடயங்களை கூட்டுறவு அமைப்பு ஊடாக நிறைவேற்ற நீண்டநாட்களாகபாடுபட்டதன் பயனாக தோற்றம் பெற்றதே இப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம். இத் துறைசார் பணியாளர்களின் எண்ணம், சிந்தனைகள் நல்லதாக அமைந்திருந்தமையால் அவை இனிதே நிறைவேறியது. இச் சங்கத்தின் ஆரம்ப காலச் செயற்பாடுகளுக்கு எமது பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் தமது பிள்ளைகளாக நினைத்து அவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு அதிக நிதி உதவிகளை செய்தமையாலும் . பணியாளர்களும் தமது நிதிப் பங்களிப்பினை செலுத்திமையாலும் இச் சங்க அமைப்பும் அதன் நலத்திட்ட செயற்பாடுகளும் குறுகிய காலத்திலேயே வெற்றி பெற காரணமாக அமைந்தமை பாராட்டுக்குரியது.

இச் சங்கம் உருவாகி 10 ஆண்டுகள் நிறைவு பெற்றமையை முன்னிட்டு வெளியிடப்படும் "கற்பக தீபம்" என்னும் மலருக்கு வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியின் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இக் கூட்டுறவுப் பணியாளர்கள் இச் சங்கத்தின் ஊடாக தமது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி ஒளிமயமான வாழ்வினை வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு.க.நடராசா.
(பனை வள சங்கங்களின் ஸ்தாபகர்)
அவுஸ்திரேலியா

யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் உருவாகி 10 ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு வெளியிடவுள்ள கற்பக தீபம் மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் இப் பனை தென்னை வள நிறுவனங்களின் ஸ்தாபகத்தலைவர் என்ற வகையில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகிலே கூட்டுறவுத்துறை தான் சிறந்த துறையாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உலக நாடுகள் அனைத்திலும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. தத்தமது நாட்டில் உள்ள வளங்களைக் கொண்டு மக்கள் கூட்டுறவு என்ற ஒளியின் ஊடாக தமது பொருளாதார வளங்களை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

அதே போல பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகிகள் தமது பணியாளர்கள் நலன்சார்ந்த கூட்டுறவு அமைப்பை உருவாக்கவும் அது தொடர்ந்து செயற்படவும் அதற்கான அனைத்து உதவிகளையும் ஆற்றி வருகின்றமை அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களும் இணைந்தால் தான் கூட்டுறவை வளர்த்து வாழ்வில் உயர்ச்சி பெற முடியும் என்ற நல்லெண்ணத்தைக் காட்டுகின்றது.

இத்தருணத்தில் சுடர்விடும் கற்பக தீபம் மலரானது பணியாளர்களின் வாழ்வின் இருள் அகற்றும் தீபமாய் ஒளிவீசட்டும் என அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு.சு.கணேஸ்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி
ஓய்வு நிலை ஆணையாளர்

கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள் என்பது அரசின், அல்லது தனியாரின் கீழ் பணியாற்றுபவர்கள் போல் அல்லாது தாம் கொண்ட சங்கங்களின் அபிவிருத்தியையும் தங்களிற்கான அபிவிருத்தியையும் பெறுவதற்குரிய சுமைதாங்கிகளே.

ஆபத்துக் காலத்திலும் வேலை, கிழமைகளில் ஆறு நாட்களிலும் வேலை என்று தாம் கொண்ட நிறுவனங்களை வழி நடத்தி செல்வார்கள்

அங்கத்தவர்கள் பலதரப்பட்டவர்களிடையே பணி செய்து தங்களது சுய கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டியவர்கள் இத்தனைக்கும் யாழ்மண்ணிலே செயற்பட்டுவரும் ப.தெ.வ.கூ சங்கங்களில் அத்தகைய சங்கங்களினது சகல பணியாளர்களையும் இணைத்து ஒரு நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி தங்களது தேவைகளை நிறைவேற்றி கொள்ள ஒரு வழி அமைக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்விச் செலவுகள், மங்கல, மரண, வைத்திய, கொடுப்பனவுகளின் ஒரு பகுதியை நிறைவேற்றிக் கொள்ள நிதிபயன்பாட்டில் இச்சங்கம் ஆறுதல் அளிக்கின்றது பங்களிப்பின் மத்தியில் ஓய்வு பெற்ற காலத்தில் ஒருசிறிய தொகையாவது ஓய்வூதியமாக கிடைக்க உருவாக்கிய திட்டம் வரவேற்கக் கூடியதே.

இதுதான் உன்னதமான கூட்டுறவு இவ்வகையில் இச்சங்கம் மேலும் வளரவும் அதன் 10ம் அகவையில் அதனை வாழ்த்துவதில் அகமகிழ்வெய்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. வீ.கே.அருந்தவநாதன்
ஓய்வு பெற்ற கூ.அ. உ.ஆணையாளரும்
வாழ்நாள்கூட்டுறவாளரும்
உருவில்
மானிப்பாய்

யாழ்மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தினால் வெளியிடப்படும் "கற்பக தீபம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கூட்டுறவு இயக்கம் சிறந்த மனித விழுமியங்களையும் பொருளாதார வளர்ச்சிக்கான சிந்தனைகளையும் உள்ளடக்கிய பாரிய விருட்சம் ஆகும். கூட்டுறவின் பெருமைகளை நன்கு புரிந்து கொண்டு கூட்டுறவுக்கான வேலையை வழங்கும் போது மேலும் பல பலன்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் ஐயம் இல்லை. விசேட பண்புகளை தன்னகத்தே கொண்டு கடந்த பத்தாண்டு காலமாக சிறப்பாக செயற்பட்டு வரும் யாழ்மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் பனை தென்னை வள தொழில் வல்லுனர்கள் பணியாளர்களின் கடின உழைப்பினாலும் வெளிவரும் கற்பக தீபமலர் கார்த்திகைத் தீப மலர் போல் ஒளி பரப்பி இச் சங்கம் சார்ந்த உறுப்பினர்களின் வாழ்விலும் ஒளி வீச எனது இதயசுத்தியுடனான வாழ்த்துக்களை தெிவித்துக் கொள்கின்றேன்.

"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போம்"
"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்வோம்"

வாழ்த்துச் செய்தி

திருமதி. க. நல்லதம்பி,
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கூட்டுறவு திணைக்களம்.
யாழ்ப்பாணம்.

யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவு சங்கத்தின் பத்து ஆண்டுகள் நிறைவில் "கற்ப தீபம்" என்னும் பெயரில் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சங்கம் 600க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டு செயற்படுவதுடன் அங்கத்தவர்களின் பொருளாதார வளர்ச்சி கருதி மங்கள நிதி, அமங்கள நிதி, வைத்திய கொடுப்பனவு, புலமைப்பரிசில் கொடுப்பனவு, உயர் கல்வி கொடுப்பனவு என்பவற்றை வழங்கி வருகின்றது அதுமட்டுமல்லாது 60 வயதில் ஓய்வுபெறும் அங்கத்தவர்கள் 90 பேருக்கு மாதாந்தம் தற்பொழுது ஓய்வூதியமும் வழங்கி வருகிறது.

அங்கத்தவர்,பணியாளர்கள் கூட்டுறவுக் கொள்கையை மனதிலிருத்தி செயற்படுவதன் மூலம் தமது அனைத்து தேவைகளையும் இலகுவாக பெற்று மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

நிர்வாக சபையினர்

இது . . .

உழைப்பிலே சிந்தை கொண்டு

ஊதியத்திலே கவனம் செலுத்தி

உதிரியாக விருந்து எம் சார்ந்த

ஊழியர்களின் மனங்களில்

உருப்படியான கருத்தினை முன் வைத்து

ஊழியர் சங்கத்தை எம்மிடையே

உருப்பெற வைத்த

அந்த உயரிய உள்ளங்களுக்கு.

சமர்ப்பணம்

கற்பக தீபத்தின் உள்ளே....

01. ஆசிச் செய்திகள்

02. வாழ்த்துச் செய்திகள்

03. சமர்ப்பணம்

04. படங்கள் நிர்வாகம்

05 சங்க உருவாக்கம்

06 கவிதைகள்

07. சிறப்புக் கட்டுரைகள்

08 சங்க வரலாறு

09. சிறுகதைகள்

10. விளம்பரங்கள்

11. ஆய்வுக் கட்டுரைகள்

12. நன்றிதெரிவித்தல்

மலர் குழுவினர்

தலைவர் :– திரு.க.சுதாகரன்

செயலாளர் :– திரு.வ.சிவகுமார்

பொருளாளர் :– திரு.சு.சிவலிங்கம்

மலர் குழு உறுப்பினர்கள் :–

திரு.N.B. யேசுராசா

திரு.வ.இராசலிங்கம்

திரு.நா.கணேசன்

திரு.செ.செல்வராசா

திரு.க.துரைசிங்கம்

திரு.ந.துளசிதாஸ்

திரு.பொ.செல்வராசா

திரு.சு.சிறிகாந்

திரு.ப.சுதாகரன்

அன்புதான் உனது பலவீனம் என்றால்
இந்த உலகில் மிக சிறந்த
பலசாலி நீதான்
அன்னை தெரெசா

தசாப்தம் ஒன்றில் எமது சங்கம்

யாழ் மாவட்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களின் ஆரம்ப காலம் தொட்டு பல விதமான எதிர்ப்புக்களின் மத்தியிலேயே தம்மை நிலைநிறுத்தி இயக்கி கொண்டிருக்கின்றன. இச்சங்கங்களின் முன்னேற்றத் திற்கும் அவற்றின் நிறுவனமயப்பட்ட செயற்பாடுகளுக்கும் பெரிதும் உந்து சக்தியாக செயற்பட்டவர்கள் இந் நிறுவனத்தின் அங்கத்தவராகிய பணியாளர்களே! உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்பட்ட யுத்த காலப்பகுதியிலும் தமது பணிகளை நேர்மையாக விசுவாசத்துடன் இதயசுத்தியுடன் ஆற்றி இந் நிறுவனங்களின் இருப்பில்தான் தமது எதிர்காலம் உள்ளது என்ற உண்மையை உணர்ந்து இச் சங்கங்களை அழியவிடாது செயற்பட பாதுகாத்து வைத்து பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டதே எமது நலன்புரி கூட்டுறவு சங்கம்.

இக் கூட்டுறவு அமைப்பில் பனை தென்னை வள ஊழியர்கள் அனைவரையும் இணைத்து தமது தேவைகளை ஒன்று கூடிப்பெற்றுக் கொள்ளும் முகமாக அமைக்கப்பட்ட இவ் அமைப்பு சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய கூட்டுறவு சங்கம், சமாசம் ஆகியவற்றின் நிதிஉதவியுடன் உறுப்பினர்களின் மாதாந்த வேதனத்தில் சிறிய தொகையை பெற்று பல சேவைகளை ஆற்றி அவர்களின் தேவைகளிற்கு கைகொடுத்து வருவதுடன் சேவையில் இருந்து ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கு அவர்களது பங்களிப்பு (மொத்த) தொகையில் 5%த்தினை ஓய்வூதியமாக வழங்கும் உன்னத திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருகின்து.

இவ் அமைப்பு 10 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு மலர் ஒன்றினை வெளியிட வேண்டும் எனும் உறுப்பினர்களின் பெருவிருப்புக்கு அமைய "கற்பக தீபம்" இன்று மலர்ந்துள்ளது. இவ் அமைப்பு இன்னும் பல நட்சத்திரங்களை முன்னெடுத்து தனது உறுப்பினர்கள் வாழ்விற்கு தீப ஒளியாய் பிரகாசிப்பதற்கு நல்ல சேவைகளை முன்னெடுத்தலுக்கான எண்ணத்தினை ஒவ்வொரு உறுப்பினர்களும் மனங் கொள்வோம்.

மலர் குழு

நிர்வாக சபை உத்தியோகத்தர்கள்

க. சுதாகரன்
தலைவர்

வ. சிவகுமார்
செயலாளர்

சு. ஸ்ரீகாந்
உபதலைவர்

சு. சிவலிங்கம்
பொருளாளர்

ந. துளசிதாஸ்
கணக்காளர்

செயலாளரின் உள்ளத்திலிருந்து....

யாழ் மாவட்டத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கமானது தனது 10வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடவுள்ள "கற்பக தீபம்" மலருக்கு எனது உள்ளத்தில் இருந்து வரும் கருத்துக்களை வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

இக் கூட்டுறவு அமைப்பினை உருவாக்குவதற்கான தூண்டுகோலை அதற்காக எம்முடன் துணைநின்று பாடுபட்டவர்களை ஒருகணம் நினைத்துப் பார்க்கின்றேன்.....

கூட்டுறவு அமைப்புக்களில் பணிபுரியும் பணியாளர்கள் பெற்று வரும் குறைந்தளவு வேதனத்துடன் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு அவர்கள் படும் சொல்லொண்ணா துன்பங்களை 23 வருடங்களாக இந்த நிறுவனங்களின் கல்வி உத்தியோகத்தராகவும் பதில் பொதுமுகாமையாளராகவும் கடமையாற்றியவன் என்ற வகையில் நான் அறிந்திருந்த காரணத்தினால் இப் பணியார்களின் நலனை பேணக்கூடிய வகையில் நலத்திட்டங்களை செயற்படுத்த கூடிய வகையில் ஒரு பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தினை தோற்றுவித்து தொழில் புரியும் காலத்தில் அவர்களுக்கு உதவுவதோடு பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஓய்வூதியம் கிடைப்பதற்கும் வழி செய்தால் அவர்கள் ஓரளவு நிம்மதியாக வாழ உதவ முடியும் என்ற எமது எண்ணத்தில் உதித்த சிந்தனையை எனது சக பணியாளருக்கும் எமது நிறுவனங்களின் கல்வி உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்திய போது அவர்களும் தமது பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் தெரிவித்தனர்.

அதன் பின்னர் ஒவ்வொரு சங்கங்களுக்கும் சக கல்வி உத்தியோகத்தர்களுடன் திரு.க.சுதாகரனுடனும் நேரில் சென்று பணியாளர்களை சந்தித்து இச் சங்கம் அமைப்பதன் நோக்கம் இதனால் அவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் தொடர்பில் எடுத்துக் கூறியதன் விளைவாக அனைத்துப் பணியாளர்களின் ஒத்துழைப்புடனும் 2005ம் ஆண்டு இவ் அமைப்பு உருவாக்கப்பட்டது.

2005ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இச் சங்கம் 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இச் சங்கத்தினால் உறுப்பினர்களுக்கு பற்பல நலதிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. மங்கள நிகழ்வுகளிற்கான நிதியுதவி, அமங்கல நிகழ்வுற்கான நிதியுதவி, கல்வி ஊக்குவிப்பு, வைத்திய நிதிஉதவி மற்றும் கடன் வழங்கல் திட்டம் என்பவற்றுடன் 2010ம் ஆண்டில் இருந்து 60 வயதினை பூர்த்தி செய்து ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்கான மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

வடமாகாணத்தில் கூட்டுறவு அமைப்பு பல இருந்தும் பனை தென்ன வளத்துறையினாலேயே பணியாளர்களின் ஓய்வுக்குப் பின்னரான நிம்மதியான வாழ்விற்கு வழி வகுக்கும் மாதாந்த ஓய்வுத்திட்டம் என்ற பாரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது பெருமைக்கும் போற்றுவதற்குரியது.

எமது இச்சங்கத்தின் திட்டங்களை வகைப்படுத்தி கணக்கு வைப்புக்களை சரியான முறையில் குறைந்த ஊதியத்துடன் சேவை மனப்பான்மையுடன் சிறப்பாக செயற்படுத்தி வரும் கணக்காளர் திரு.ந.துளசிதாஸ் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

இவ் அமைப்பில் ஆரம்ப காலம் தொடக்கம் செயலாளராக பணியாற்றியமையால் இவ் அமைப்பின் பதிவு செய்தல் மற்றும் விதி, துணைவிதி, நடைமுறை விதி, தயாரிப்பு வேலைகளுக்காக

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான திரு.சு.கணேசமூர்த்தி திரு. ஐயாத்துரை திரு.வீ.கே.அருந்தவநாதன் ஆகியோர் தமது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் காலத்திற்கு காலம் எமது நிறுவனத்திற்கு வழங்கி நிறுவன வளர்ச்சிக்கு உதவியமையை நன்றியுடன் நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் சங்கங்கள், கொத்தணிகள் மற்றும் சமாசம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினாகள் எமது நலன்புரி சங்கத்தின் உருவாக்கத்திற்காக பாரிய நிதிஉதவி வழங்கி எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு துணை நின்றமைக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். சங்க அங்கத்தவர்கள் தாம் சார்ந்த சங்கங்களின் வளர்ச்சியில் முழுமையான அக்கறையோடு செயல்பட வேண்டும்.

இவ் அமைப்பு உறுப்பினர்களுக்கு மேலும் நல்ல பல திட்டங்களை முன்னெடுத்து தொடர்ந்தும் சிறப்பாக செயற்பட்டு வெள்ளிவிழா,வைரவிழா,பொன்விழா, நூற்றாண்டுவிழா என பல விழாக்கள் கண்டு தீப ஒளியாய் பிரகாசிக்க இறையருளை வேண்டி கற்பக தீபம் மலர் சிறப்பாக அமைய வாழ்த்துக்களை தெரிவிப்பதிலும் பெருமகிழ்வடைகின்றேன்.

வ.சிவகுமார்
செயலாளர்
யாழ் மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நி.ப.ந.பு.சங்கம்

பதிறாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க

1. புகல்	9. நுகர்வு
2. கல்வி	10. அறிவு
3. வலிமை	11. அழகு
4. வெற்றி	12. பெருமை
5. நன்மக்கள்	13. இனிமை
6. பொன்	14. துணிவு
7. நெல்	15. நோயின்மை
8. நல்விதி	16. நீண்ட ஆயுள்

யாழ்மாவட்ட பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின்

வரலாறும் வளர்ச்சியும்

யாழ் மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தமக்குள் ஓர் கூட்டுறவு அமைப்பினை உருவாக்கி அதன் ஊடாக தமது நலன்களை படிப்படியாக பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்ற மன உறுதியுடன் இச் சங்கத்தை உருவாக்க தீர்மானித்தார்கள்

இச் சங்கமானது 2005ம் ஆண்டு உருவாக்கபட்ட போது அதன் உருவாக்கத்திற்கு அப்போது சங்கங்களில் பணியாற்றிய கல்வி உத்தியோகத்தர்கள் முழுமையான தனது பங்களிப்பினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு சங்கங்களின் தலைவர்கள் பணியாளர்கள் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஆலோசனைகள் ஒத்துழைப்புக்கள் வழிகாட்டல்கள் போதியளவு எமக்குக் கிடைத்தமையால் இச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 09 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு 28.01.2015 அன்று இச் செயற்குழுவிடம் இச் சங்கத்தின் துணைவிதியாக்கம் உட்பட்ட ஏனைய அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பணியினை இக்குழுவினர்கள் சிறப்பாக செய்து முடித்தனர்.

18.03.2015ம் திகதி கூடிய பொதுச்சபை மேற்கூறப்பட்ட செயற்குழுவால் தயாரிக்கப்பட்ட துணைவிதி நடைமுறை விதிகளை ஆராய்ந்து இச் சங்கத்தை நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்ட கூட்டுறவு சட்டதிட்டங்களிற்கு அமைய அதனை பதிவு செய்வதோடு கணக்கு வைப்பு முறையினையும் கூட்டுறவுச் சட்டங்களிற்கு அமைய பேணப்பட வேண்டும் என தீர்மானித்தது. இதனை தொடர்ந்து 18.03.2005ம் திகதியில் கூடிய நெறியாளர் சபை கணக்கு வைத்தல் தொடர்பில் சமாசக் கணக்காளர் துளசிதாஸ் அவர்களை சமாசப் பணிப்பாளர் சபையின் அனுமதியுடனும் கூ. அ. உ. ஆணையாளரின் அனுமதியுடனும் இச் சங்கத்தின் கணக்காளராக பணியில் அமர்த்தப்பட வேண்டும் என

தீர்மானிக்கப்பட்டது. அதன் படி சமாசக் கணக்காளரே இன்று வரை இச் சங்கத்தின் கணக்காளராக இருந்து திறமையாக செயற்படுத்தி வருகின்றார்.

இச்சங்கத்தின் யாழ்மாவட்டத்தில் செயற்படும் பனை தென்னை வள நிறுவனங்களின் பணியாளர்கள் அனைவரும் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர் தற்போது சுமார் 600 பேர் அங்கத்தவர்களாக இணைந்துள்ளனர். ஆரம்பத்தில் அங்கத்தவர்களிடம் இருந்து மாதாந்தம் ரூபா 100/= அறவிட்டு ரூபா 75/= உறுப்பினர் சேமமாகவும் ரூபா25/= சந்தாவாகவும் கணக்கு வைக்கப்பட்டு வந்தது.

தற்போது ஓய்வூதியத்திற்கு 250/=
சேமமாக மாதாந்தம் 150/= மொத்தம் 400/= ரூபா ஆகும்

எமது சங்கத்தின் ஆரம்ப செலவுக்காக பனை தென்னை வள சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் ஆகியன தலா ரூபா 5000/= வீதம் மொத்தம் ரூபா 100000/= நன்கொடையாக வழங்கி ஊக்கப்படுத்தியமை இச் சங்கத்தின் வளர்ச்சிக்கான படிக்கல்லாக அமைந்தது இவ் உதவியை எமது சங்கம் என்றும் நன்றியுடன் நினைவில் கொள்ளும்.

காலப்போக்கில் இச் சங்கத்தின் வளர்ச்சி மேன்மேலும் அதிகரித்து சென்றபோது அங்கத்தவர்களின் ஆதரவும் கிடைத்தமையால் சங்கம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் காசோலை மூலம் மேற்கொண்டு வந்தமையால் நிதி தொடர்பான கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அங்கத்தவர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

தொடர்ந்து இச் சங்க பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட தலைவர், செயலாளர், பொருளாளர், பணியாளர் சபையின் செயற்பாடுகள் மிகவும் சிறப்பானதாக அமைந்தமையால் சங்கம் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் சென்றது இதன் காரணமாக அங்கத்தவர்களுக்கு நலத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்த வழிசமைத்தது.

எமது சங்கத்தின் நலத்திட்ட செயற்பாடுகள் 2005 தொடக்கம் இன்றுவரை

மங்கள நிதி பெற்றவர்கள்	131பேர்	393000.00
கல்விக்கொடை பெற்றவர்கள்	76பேர்	191500.00
வைத்திய நிதி பெற்றவர்கள்	74பேர்	232800.00
அமங்கள நிதி பெற்றவர்கள்	43பேர்	272000.00

எமது அங்கத்தவர்களிற்கு மேற்படி நலநிதிக் கொடுப்பனவுகள் சங்கத்தினால் வழங்கப்பட்டமை அவர்கள் நலன்சார்ந்த விடயங்களில் சங்கத்தின் அக்கறையை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

இந் நலதிட்டங்களுடன் உறுப்பினருக்கான கடன் வழங்கல் செயற்பாட்டையும் சங்கம் மேற்கொண்டு வருகின்றது உறுப்பினர்கள் தமக்கான வீடமைப்பு, வீடு திருத்தம், காணி கொள்வனவு, பிள்ளைகளின் உயர் கல்வி போன்ற தேவைகளை உடனடியாக நிறைவேற்றும் பொருட்டு கடன் வழங்கப்படுகின்றது 2005ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை 287 அங்கத்தவர்களிற்கு ரூபா 1,14,50000.00கடனாக வழங்கப்பட்டுள்ளது இக் கடனிற்கான மாதாந்த வட்டியாக 14% அறவிடப்படுகின்றது.

இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் 60 வயது பூர்த்தியின் பின் தொழிலில் இருந்து ஓய்வு பெற்ற காலத்தில் மற்றவர்களின் தயவை நாடாது வாழ்வதற்கு வசதியாக ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இச் சங்கத்தை உருவாக்கியவர்களின் உள்ளத்தில் ஆரம்பம் தொட்டு இருந்து வந்ததால் இச் சங்கம் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளில் (2010ம் ஆண்டு) இவ் ஓய்வூதியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றமை எமது அங்கத்தவர்களிற்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இவ் ஓய்வூதியத்திட்டம் உருவாக்கபட்டபோது பணியாற்றும் நிறுவனங்கள் நிதியுதவி செய்து இத்திட்டத்திற்கு கைகொடுத்தமை

கூட்டுறவு பணியாளர்கள் நன்றி உடையவர்களாக என்றென்றும் இருத்தல் வேண்டும்.

இவ் ஓய்வூதியத்திட்டதிற்கு நிதி வழங்கி ஆதரவு தந்த நிறுவனங்கள்

16 யாழ் மாவட்ட ப.தெ..அ.கூ.சங்கங்கள் தலா ரூபா 200000.00%
3 கொத்தணிகள் தலா ரூபா 300000.00%
சமாசம் ரூபா 2000000.00%

இந் நிதியுடன் அங்கத்தவர்கள் தாம் சங்கங்களில் சேவையை ஆரம்பித்த காலம் தொடக்கம் வருடம் ரூபா600/= வீதம் இத்திட்டம் உருவாக்கிய 2010ம் ஆண்டு வரை ஓய்வூதிய நிதியாக வழங்கியமையால் உதாரணமாக 10 வருடம் சேவைக்காலத்தை கொண்ட உறுப்பினர் 600/= ×10=6000/= ரூபா செலுத்த வேண்டும் இப்படியாக 600 அங்கத்தவர்களிடம் இருந்து நிதி பெறப்பட்டது இந் நிதியினை கூட அவர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் முற்பணமாக வழங்கி பின்னர் மாதாந்த சம்பளத்தில் பணியாற்றியவர்களிடம் இருந்து சிறிது சிறிதாக அறவிடப்பட்டு சீராக்கியமை இந் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியினை உண்மையாகவும் விசுவாசமாகவும் ஆற்றி தாம் சார்ந்த நிறுவனங்களை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல அயராது பாடுபட வேண்டியது தலையாய கடமையாகும் என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

இவ் ஓய்வூதிய நிதியினை மேலும் பெருக்கும் வகையில் சங்கம் வருடாந்தம் அதிஸ்டலாப சீட்டு விற்பனை மூலமும் நிதி சேகரிப்பினை மேற்கொண்டு செயற்பாடுகளை ஆராய்ந்து செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது சங்க உறுப்பினர்களின் வாழ்வு கூட்டுறவில் இணைந்தமையால் சிறப்புபெற்றமை கூட்டுறவின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

கூட்டுறவு ஓர் புனிதமான அமைப்பு அதனை நாம் எல்லோரும் உணர்ந்து செயற்படுவோம். அதன் ஊடாக ஒற்றுமையாக அரிய பல நலன்களை இச் சங்கத்தினூடாக பெற்று மகிழ்வுடன் வாழ்வோம்.

மங்கள நிதி பெற்றவர்கள் 2015-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2006	12	36,000.00
2	2007	14	42,000.00
3	2008	17	51,000.00
4	2009	10	30,000.00
5	2010	18	54,000.00
6	2011	16	48,000.00
7	2012	16	48,000.00
8	2013	06	18,000.00
9	2014	15	45,000.00
10	2015	02	6,000.00
11	2016	05	15,000.00
	மொத்தம்	131	393,000.00

கல்வி நிதி பெற்றவர்கள் 2015-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2006	06	16,000.00
2	2007	07	15,000.00
3	2008	05	10,000.00
4	2009	18	47,000.00
5	2010	14	34,000.00
6	2011	03	9,000.00
7	2012	08	17,500.00
8	2013	06	13,000.00
9	2014	01	2,000.00
10	2015	04	8,000.00
11	2016	04	10,000.00
	மொத்தம்	76	181,500.00

வைத்திய நிதி பெற்றவர்கள் 2015-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2006	07	10,800.00
2	2007	03	3,000.00
3	2008	07	14,000.00
4	2009	08	14,000.00
5	2010	07	9,000.00
6	2011	02	9,000.00
7	2012	08	13,000.00
8	2013	11	13,000.00
9	2014	09	25,000.00
10	2015	05	12,000.00
11	2016	07	10,000.00
	மொத்தம்	74	132,800.00

அமங்கள நிதி பெற்றவர்கள் 2015-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2006	00	0.000
2	2007	02	40,000.00
3	2008	00	0.000
4	2009	06	74,000.00
5	2010	05	15,000.00
6	2011	08	46,000.00
7	2012	09	58,000.00
8	2013	03	9,000.00
9	2014	03	9,000.00
10	2015	04	12,000.00
11	2016	03	9,000.00
	மொத்தம்	43	272,000.000

கடன் பெற்றவர்கள் 2015-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2006	19	190,000.00
2	2007	18	260,000.00
3	2008	20	310,000.00
4	2009	27	590,000.00
5	2010	44	1,315,000.00
6	2011	53	2,430,000.00
7	2012	44	1,855000.00
8	2013	11	430,000.00
9	2014	13	390,000.00
10	2015	25	1,250,000.00
11	2016	13	1,125,000.00
	மொத்தம்	287	10,145,000.00

ஓய்வு பெற்ற உறுப்பினர்கள் சேம வட்டி திரும்பம் 2015-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2006	12	12,400.000
2	2007	21	31,600.00
3	2008	17	47,800.000
4	2009	16	60,400.00
5	2010	25	132,600.00
6	2011	20	130,300.00
7	2012	25	177,700.00
8	2013	27	199,900.00
9	2014	29	273,300.00
10	2015	22	252,600.00
11	2016	14	142,600.00
	மொத்தம்	228	1,461,200.00

ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் 2010-2016/07வரை

இல	ஆண்டு	அங்கத்தவர்கள்	பெறுமதி
1	2010	19	119,470.00
2	2011	35	375,800.00
3	2012	51	616,700.00
4	2013	64	816,600.00
5	2014	92	1,199,000.00
6	2015	99	1,419,300.00
7	2016	103	1505700.00
	மொத்தம்		60,52,570.00

நம்மை உயர்த்தும் 7 விடயங்கள்

1. ஏழ்மையின் நேர்மை
2. கோபத்தில் பொறுமை
3. தோல்வியின் விடாமுயற்சி
4. வறுமையின் உதவி செய்யும் மனம்
5. துன்பத்திலும் துணிவு
6. செல்வத்திலும் எளிமை
7. பதவியிலும் பணிவு

கவிதைகள்

பணியாளர் சங்கமே!

பனைவளச் சங்கங்களின்
பணித் தொகுதியின் நலன் காக்க
பக்குவமாய் முகழ்ந்தெழுந்து
பத்தாண்டு சேவை கடந்து
பாங்குடன் நிற்குதெங்கள்
பணியாளர் (நல நோன்பு) கூ.சங்கம்

பணியாளர் நலன் காக்கும்
பணியதுவே இதன் தோற்றம்
இனிதான நலத்திட்ட(ங்கள்)ம்
எந்நாளும் இதன் நோக்கம் - பணியாளருக்காய்
வளமான எதிர் காலம் வகுத்து
வழங்குதலே இதன் நாட்டம்

ஓய்வூதியம் வழங்கல் - இதன்
ஒப்பற்ற முதற் திட்டம்
ஆதரவுக் கரம் நீட்டல் இதன்
ஆழமான கருத் திட்டம் - பணியாளருக்காய்
உதவுதல் என்பதுவே - இதன்
உள்ளார்ந்த செயற் திட்டம்

மங்கள நிதி வழங்கல் - இதன்
மகத்தான பணித் திட்டம்
அமங்களத் தொகை வழங்கல்
ஆபத்திலுதவும் அபாரமான ஒரு திட்டம்
கடன் வழங்கும் திட்டம் எங்கள்
இடர் களையும உயர் திட்டம்

பணியாளர் சங்கம் இது - கூட்டுறவுக்காய்ப்
பணி(புரி)யும் சங்கம்
துணிவான கருமங்களை என்றும்
துரிதமாய் செய்யும் சங்கம்
பணியாளர் மனம் மகிழும்
கணிவான முதற் சங்கம்

யாழ் மண்ணில் உதித்த சங்கம் - கூட்டுறவை
பார் புகழ் வளர்க்கும் சங்கம்
பனை தென்னை கூட்டுறவுச் சங்கம்
பணித் தொகுதி வாழ்த்தும் சங்கம்
ஊர் முழுக்கச் சேவை செய்யும் - நல்ல
உத்தேசம் கொண்டசங்கம்

தே.யோ.தவராசா
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

பதிவுகள் சில...

பதிவுகள் சில...

பதிவுகள் சில...

பதிவுகள் சில...

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பாக மலர
எமது வாழ்த்துக்கள்

எமது கொத்தனியின் தயாரிப்புக்கள்

வரணி பனஞ்சாராயம்

தற்போது 750 மி. லீற்றருடன்,
375, 180 மி. லீற்றர் ஆகிய
அளவுகளிலும் கிடைக்கின்றன

கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்

பாலர் பாடசாலை
மாணவர், ஆசிரியர்களுக்கு
இலவச சீருடைத்துணி
வழங்கல்

வாடகை உழவு இயந்திரம் சேவை

நலன்புரித்திட்டங்கள்

அங்கத்துவ சங்கங்களின் அங்கத்துவர்,
பணியாளர்களுக்கான பல்வேறு
நலதிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வரைவுள்ளது)
பருத்தித்துறை வீதி,
வரணி
தொ.பே: 021 321 1653

சொர்க்கத்தங்கம்

மங்காச் சேவை கொண்ட நலன்புரிச்சங்கமே
மாலை சூடி மங்களம் பொங்கும் புகழ் எங்குமே

கூட்டுறவில் வாழ்வோனை வாரி அனைத்திட்ட
திறவுகோல்
குற்றுயிராய் கிடந்த எம்மை மீட்ட ஒரு உறவு போல்

நலிவுற்ற நம் வாழ்வுக்கு ஒரு ஒளிபிறந்தது
நலன்புரிநிதியாக வீச வாழ்வில் நம்கவலை மறந்தது

நாட்கள் நகர நாடி நரம்பில் ஞானம் தேடின
நல்ல நல்ல அம்சமாய் திட்டங்கள் பல கூடின

ஓய்வுதியத்திட்டமாய் உதித்த ஒரு சூரியனாய்
உதயமாகி நல்வாழ்வுக்கு பெரும் காரியனாய்

மாற்றாய் மலர்ந்த மனமுவந்த திட்டங்கள் - பெரும்
மங்கள அமங்கள கல்விக்கென நலன் வழங்கும் பல திட்டங்கள்

சத்தியம் செய்து சாதனையாக்கி வென்றிடவே - அது
சந்தைகளில் சரிகின்ற வட்டிதானும் சளைக்காது நின்றிடவே

பலவழித்திட்டங்கள் பட்டிட பெருட் பாதை அமைந்தது
பல்லைக் கடித்து பற்றுறுதியாய் பணிக்கு வழி அமைத்து

ஐயிரண்டு அகவை தனில் பெரும் ஆல விருட்சமாய் நாம்
ஆராத்தி எடுத்திட நீடுழி வாழ எதிர் கால சுபீட்சமாய்

மறப்பதற்கு இல்லை மகுடம் சூட்டும் மனப்பாடமாய் - அது
மலராக தீபம் எனும் நாமத்தில் என்றும் உயர் பீடமாய்

வாழும் காலத்தின் வளரும் சமூகத்தின் ஒளி தீபம் - கற்பக தீபமாக
வானவில்லாய் வர்ணம் தீட்டி வடிவமைத்த நினைவுத்தூபம்

வாழ்கவே வாழ்க பல்லாண்டு காலமாய் நலன்புரி சங்கம்
வார்த்தைகள் இல்லை வானளாது மேலோஞ்சும் சொக்கத் தங்கம்

பி. பிறேமதாசன்
பொது முகாமையாளர்
வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்

நில் கவனி செயல்படு

அ னைவரையும் ஒன்று சேர்
ஆ தரவுக் கரம் நீட்டு
இ யன்ற வரை உதவி செய்
ஈ டு இணை யின்றிச் செயற்படு
உ ழைப்பே உன் உயிர் மூச்சு
ஊ க்கமே என்றும் உன் முயற்சி
எ ல்லோருக்குமாய்ப் பாடுபடு
ஏ ணி போல் ஏற்றம் பெறு
ஐ க்கியம் வளர்த்திடு
ஒ ற்றுமைக்காய் குரல் கொடு
ஓ யாமல் பணி செய்
ஔ டதமாய் விளங்கி நில்
ஃ கு போல் திடம் கொள்

சு. சிவலிங்கம்
கல்வி அலுவலர்
கோண்டாவில்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

கூட்டுறவுச் சிந்தனைகள்

* கூட்டுறவே நாட்டுயர்வு
* கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
* ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
* ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வு
* ஒன்று கூடி உழைத்தல்
* ஒன்று கூடி வாழ்தல்
* விடா முயற்சி சுறுசுறுப்பு
* சுய உதவி பரஸ்பர உதவி
* சிக்கனமே சேமிப்பு

பதிவுகள் சில...

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

டச்சுவீதி
சாவகச்சேரி.

Tel .021.2270086,
021 2313572
Fax 021 2270086

எமது நிறுவனத்தின் நலன் புரித் திட்டங்கள்

அங்கத்தவர் நலத்திட்டம்

- ஓய்வூதியம் வழங்கல்
- வியத்து மரணக் கொடை வழங்கல்
- ஓய்வு பெற்ற அங்கத்தவர் கௌரவிப்பு
- சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு
- கல்விப் பயிற்சி வழங்கல்

மகளிர் சேவை

- தையல் மனைப்பொருளியல்
- அழகுக்கலைப் பயிற்சி வழங்கல்
- சுய தொழில் ஊக்குவிப்பு
- கைத்தொழில் உற்பத்தி ஊக்குவிப்பு

கிராமிய வங்கிச் சேவை

- நிலையான வைப்புக் கடன் சேவை
- ஓய்வூதியச் சேவை
- பண்டிகைக் கால கொடுப்பனவு

அங்கத்தவர் நலத்திட்டம்

- போட்டோப்பிரதி அச்சிடல்
- பக்ஸ் வசதி சேவை
- கதிரை வாடகைச் சேவை
- பனை வெல்ல உற்பத்தி
- போத்தல்கள் உற்பத்தி

- அங்கத்தவர் பணியாளரின் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கல்.
- அங்கத்தவர், பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கல்.
- சங்கத்தின் அனுசரணையின் கீழ் இயங்கும் முன் பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தபடி 2000/= வழங்கல்.
- சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டிக்கு 2500/= வீதம் வழங்கல்
- அங்கத்தவர் பணியாளர் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்
- முன்பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சீருடை வழங்கல்.
- உழவு இயந்திர வாடகைச் சேவை
- சுவையணவு விற்பனை

பதிவுகள் சில...



பதிவுகள் சில...

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

எமது சேவைகளும் செயற்பாடுகளும்

பனை தென்னை வள உற்பத்திகள்

நலனோங்கும் திட்டங்கள்

கிராமிய வங்கிச் சேவைகள்

தங்குமிட வாடகைச் சேவைகள்

குறைந்த கட்டணத்தில்
நிறைவான வசதிகளுடன்
கூடிய தங்குமிட தேவைக்கு
எம்மை நாடுங்கள்.

அரியாலை பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ - து)

இல. 15, நடுத்தெரு லேன்,
அரியாலை.

தொ.பே:
021 222 6336

பதிவுகள் சில...

பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கமது பல்லாண்டு வாழியவே

தெங்கு பன் பொருள் வளத்தினயே
தெய்வ கொண்டேமாகக்
தேசத்தின் பொருளாதார வளம் உயர - நாளும்
நேசமுடன் உழைக்குமந்த - கூட்டுறவுப்
பணியாளர் நலன்புரிச்சங்கமதன்
பத்தாண்டு மலராக மலரும் - கற்பக தீபம்
என்றும் எம் வாழ்வாதாரத்தில்
ஒளியேற்றும் சுடராக வாழியவே

நேயமுடன் அளப்பரிய சேவை செய்து
நெஞ்சமதில் நிறைவு கொள்ளும் - ஊழியர்கள்
தூயபணி செய்யும் எங்கள் கூட்டுறவுப்பணியாளர்
யாபேருக்கும் சேவையின் பயனாலே
தேவைதனை நிறைவேற்ற - உதித்ததுவே
பணியாளர் நலன்புரிக்கூட்டுறவு சங்கமதுவே
பணியாளர் சங்கமதன் பத்தாண்டு சேவைகளை
பறைசாற்றும் மலரே கற்பக தீபம்

கூட்டுறவுப் பணியாளர் - குறை
நிறைகள் கண்டறிந்து
சம்பள முரண்பாட்டை
சாதகமாய் தீர்த்திடவும் - பணியாளர்
வாழ்வுயர வழிபல சமைத்திடவும்
தீட்டிய திட்டங்களோ - பலபல
கூட்டுறவுப் பணியாளர் பிள்ளைகளின் - கல்வி
வளர்க்கும் கல்வி நிதி

சுபகாரியங்கள் நடந்தேறிடவே
மலரும் மங்கள நிதி
நோய்வாய்ப்பட்டு வருந்துகின்ற வேளைதனில்
உயிர் காக்கும் மருத்துவநிதி

இறுதிப்பயணத்திலும் தோள்கொடுக்கும்
இறைசெயலே மரணநிதி
இத்தோடு நிற்கவில்லை இதன் பணிகள்
இன்னும் இருக்கவே இருக்கு

கூட்டுறவுப் பணியாளர் குடும்ப வாழ்வும்
கூட்டுறவாய் வாழவென்றே
மகுடம் வைத்தோர் மகத்தான செயலாக
மிளிர்கிறதே கூட்டுறவுப்பணியாளர்
ஓய்வூதிய திட்டமது
பணிநிறைவு கண்டு ஓய்வு பெற்று
பிற்கால வாழ்விலும்
பணியாளர் வாழ்வு பலம் பெற
நல் வழி அமைக்கும்
யாழ் மண்ணின் பனை தென்னை வள
பணியாளர் நலன்புரி கூட்டுறவு சங்கமது
பல்லாண்டு வாழியவே.....

கி.வரதராசன்
பொதுமுகாமையாளர்
அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

நீ நீயாக வாழக் கற்றுக்கொள்
சிலர் உன்னை விரும்புவார்
சிலர் உன்னை வெறுப்பார்
கவலைப்படாதே
இது உன் வாழ்க்கை

ஓ இளைஞனே,
யாருக்காகவும் உன்னை மாற்றிக்கொள்ளாதே
ஒருவேளை மாற நினைத்தால்
ஒவ்வொரு மனிதர்களிற்காகவும்
நீ மாறவேண்டி வரும்

கண்ணதாசன்

கோண்டாவில் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

எமது செயற்பாடுகளும் சேவைகளும்

அங்கத்தவர் நலத்திட்டங்கள்

- மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்
- விபத்து மரணக்கொடை வழங்கல்.
- பொங்கல் பொதி வழங்கல்.
- கூட்டுறவுக் கல்விப் பயிற்சி வழங்கல்.

கிராமிய வங்கி சேவைகள்

- சேமிப்பணம் பெறுதல்
- அங்கத்தவர்/பணியாளர்/மகளிர் கடன் வழங்கல்
- மோட்டார் சைக்கிள் கொள்வனவு கடன் வழங்கல்
- வெஸ்ரர்ன் யூனியன் பண பரிமாற்றம்
- அப்புதுரி கட்டணம் ஏலவிடுதல்
- மின்சார கட்டணம் ஏலவிடுதல்
- சிறுவர் சேமிப்பாளர் ஊக்குவிப்பு வழங்கல்

தொழில் முயற்சிகள்

- அங்கத்தவர் சார்பு உற்பத்தி கொள்வனவு விற்பனை செய்தல்
- போத்தல்கள் உற்பத்தி விற்பனை
- கல்லாக்காரம், பனை வெல்லம், பதநீர் உற்பத்தி விற்பனை

மகளிர் நலத்திட்டங்கள்

* தையல் பயிற்சி வழங்கல்
* மனைப்பொருளியல்.
* அழகுக் கலை பயிற்சியளிப்பு
* சுயதொழில் முயற்சி உதவுவிப்பு

சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்

- ☆ முன்பள்ளிகளை நடத்துதல்
- ☆ ஆசிரியர் கௌரவம் வழங்கல்
- ☆ ஆசிரியர், மாணவர்கள் கௌரவித்தல்
- ☆ புலமைப்பரிசில் கல்விக் கொடை வழங்கல்
- ☆ க.பொ.த சாதாரண உயர் பிரிவு பல்கலைக்கழக கல்விக் கொடை வழங்கல்
- ☆ அங்கத்துவர்களுக்கான மகசக கட்டடம் குறைந்த கிணறு அமைத்துக் கொடுத்தல்

கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ/து)

தாவடி சந்தி,
கோண்டாவில்.

தொலைபேசி
021 222 3539

ஊர்காவற்றுறை ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு
மலருக்கு எமது வாழ்த்துக்கள்

பனை வெல்லம் உற்பத்தி

பதநீர், கள்போத்தலில் அடைத்து விற்பனை

பனைசார் பொருட்கள் விற்பனை

மகளிருக்கான சேவைகள்

பாலர் ஊக்குவிப்பு

வாடகை பாவூர்தி சேவை

கிராமிய வங்கிச் சேவை

தொலைபேசி சேவை

உளவள நலத்திட்டம்

அங்கத்தவர் நலத்திட்டம்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பிரதான வீதி
ஊர்காவற்றுறை

021 492 2311

வடமாகாண ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் சமாசம்

பருத்தித்துறை ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

வாழ்த்துகின்றோம்

வடக்கில் நோன்றி வளம் பெருக்கி
அங்கத்தவர் வாழ்வில் வசந்தம் வீசிட
வழிசமைத்த எம் கூற்றுறவு நிறுவனங்கள்
இன்னும் பல்லாண்டு சேவைகள் புரிந்து
நீடுழி வாழ்க வாழ்த்துகின்றோம்

உற்பத்தி ஊக்குவிப்பு நலன்புரிச் திட்டங்கள்

உப உணவு உற்பத்திகள்

தரமான பனை வெல்லம்

தரமான ஒடியல்

தரமான புழுக்கொடியல்

போத்தற்கள் உற்பத்திகள்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
போத்தலில் அடைக்கபபட்ட
தரமான பானங்கள்

ஏனைய செயற்பாடுகளும் சேவைகளும்

★ கிராமிய வங்கிச் சேவை
- சேமிப்புத் திட்டம்
- கடன் திட்டம்

★ வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை

★ அங்கத்தவர்களின் நலத்திட்டங்கள்
★ மகளிர் சுயதொழில் பயிற்சித் திட்டம்
★ தொலைபேசிச் சேவை

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ - து)

கிராமக் கோட்டடி.
புலோலி.
பருத்தித்துறை.

தொ.பே: 021321 4402
021 2260032
தொ.நகல்: 021 2260032

வரலாற்றில் ஓர் இடம்

இலத்திரனியல் யுகம்
வியாபார நிறுவனங்களிடையே
விற்பனைக்கான போட்டி
இலவச இணைப்புக்கள்
தவணைக் கொடுப்பனவுகள்
கடன் விற்பனைகள்
கவர்ச்சிகரமான விளம்பர யுக்திகள்

இவைகளிற்கிடையே
"சேவை" நோக்கம் கொண்ட
தன் இருப்பை தக்க வைக்கும் முயற்சியில்
திக்குமுக்காடி திணறி நிற்கிறது ஓர்அமைப்பு
அது தான் கூட்டுறவு

குறைந்த ஊதியம்
பொருளாதாரச்சுமை
உணவு..உடை....உறையுள்.....கல்வி.....
மருந்து.....விழாக்கள்....பண்டிகைகள்
சுழன்றடிக்கும் "தேவைகள்"
என்ற புயற்காற்றின் ஊடாக
வாழ்க்கை என்ற படகை செலுத்தி
கரை சேர தவிக்கும் இவர்கள் யார்?
நாம் கூட்டுறவு ஊழியர்கள்

தேவைகளின் பட்டியல்
சங்கிலி தொடராய்.....நீண்டு போக
அதற்கான இயலுடைகள் குறுகிப் போக
இவை இரண்டிற்கும் இடையே நாம்
அல்லாடி சோர்ந்து போன வேளையிலே.....

நொந்து போன உள்ளத்திற்கு - ஒளடதமாய்.....
இருண்டு போன இதயத்திற்கு - நெய்விளக்காய்...
வரண்டு போன மனங்களிற்கு - நீருற்றாய்.....

பனை தென்னை வளத்துறை
சிந்தனை சிற்பிகளின் பிரசவத்தில்
முத்தாய் வந்துதித்து

பணியாளர் நலன்புரிக் கூட்டுறவு சங்கம் எனும்
அழகான நாமம் அணிந்து கொண்டாய்

2005ம் ஜனனித்து
மெல்லத்தவழ்ந்து
அகவை பத்தில் அடியெடுத்து
எட்டி நடை போட்டு

பத்து வயது பாலகரை
புடம் போட வைக்கும்
புலமைப் பரிசில் சித்திக்கு நிதி தந்து- எம்
பாலர் கல்விக்கு துணை நின்றாய்
பல்கலைக்கழக உயர் கல்விக்கு நிதி தந்து- எம்
பிள்ளைகளின் முன்னேற்றத்தில் பங்குகொண்டாய்
வைத்திய செலவிற்கு நிதி தந்து - எம்
ஆரோக்கியத்திற்கு அக்கறை கொண்டாய்
மங்கள, அமங்கள நிகழ்விற்கு நிதி தந்து -எம்
சுக துக்கங்களில் தோள் கொடுத்தாய்
சுய தேவைப் பூர்த்திக்கு கடன் தந்து - எம்
பொருளாதாரத்திற்கு கை தந்தாய்

உழைத்துக் களைத்து - நாம்
ஓய்வு பெறும் வேளையிலே....
யார் தயவும் இன்றி
எம் உழைப்பில் நாம் வாழ
மாதாந்த "ஓய்வூதியம்" என்ற
பொக்கிசத்தை தந்து - எம்மையும்ஓய்வூதியர்களாக்கி
பெருமை கொண்டாய்

"ஓய்வூதியம்" என்பது
எட்டாக் கனியாகி
மாற்றாந்தாய் பிள்ளைகளாய்
ஏம்பலித்து நின்றவரின்
ஏக்கத்தைத் தீர்த்துவைத்து - எம்மை
தாயாய் அரவணத்தாய் .....அம்மா - நீ
கூட்டுறவு வரலாற்றில் தடம் பதித்தாய்

திருமதி. இராஜசுலோசனா தேவராஜா
பணியாளர்
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்

கவித்துளிகள்

மரணம்

வாழ்க்கை நாடகத்தின்
இறுதிக் காட்சி
பிறப்பு வாத்தியாரின்
பதவிப் பறிப்பு

தொலைக்காட்சி

வீட்டுப் பெண்களின்
வேலைகளைச் சீரழிக்கும்
உலோகத்திலான
போதைவஸ்து

என் பிறப்பு

அம்மாவும் அப்பாவும்
கதவுகளை மூடிக் கொண்டதற்காக
கடவுள் வழங்கிய தண்டனை
என் பிறப்பு

காதல்

என்னதான் எதிர்ப்பு வந்தாலும்
எதிர் பாலருக்காய்
எதுவும் செய்யத் துணிந்து விடும்
மருந்தே இல்லாதமனநோய்

நட்சத்திரங்கள்

இருட்டுச் சட்டிக்குள்
ஒட்டிக் கொண்டு
கண் சிமிட்டும்
மின்மினிப் பூச்சிகள்

மோட்டார் சைக்கிள்

வேக வேகமாய்ப்
பயணம் போக
விதம் விதமாய்த்
தருவிக்கப்படும் - எமதர்மனின்
இன்னுமொரு பாசக்கயிறு

சந்திரன்

தேய்ந்து வளர்ந்தாலும்
ஒய்ந்து போகாது
ஒளி தரும் "ரோச்லைற்"

தீக்குச்சி

ஒளி ஏற்ற
உயிர் கொடுக்கும்
தற்கொடையாளி

வானம்

சூரிய சந்திரர்
சுற்றிவரும்
சொக்கட்டான் பந்தல்
வெள்ளிக் கூடங்கள்
அண்டி வாழும்
தொங்கு மாடம்

கான் போன்

இளசுகளின் மனசுகளைக்
களங்கப்படுத்தி
கலாச்சாரத்தைச் சீரழிக்கும்
குட்டிச் சாத்தான்

தலையணை

சாத்து வாயை
உறுஞ்சிக் கொள்ளும்
இரவு நேர "பம்பஸ்"

சூரியன்

தினம் தினம் மறைந்தாலும்
மறவாது பிறப்பெடுக்கும்
இறவா(த) வரம் பெற்ற
வெளிச்ச கூடு

முதலிரவு

புலியும் மானும்
கைகோர்த்துக் கொள்ளும்
அதிசய உறவு

தே.யோ.தவராஜா
பணியாளர்
கோண்டாவில் ப.தெ.வளம்

வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்களின் கொத்தணி

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்!

எமது தொழிற்பாடுகள்

மதுபானம் மதுசார உற்பத்தி
பனம் சாராய உற்பத்தி, விற்பனைகள்
போத்தலில் அடைத்தல் விற்பனை
வாடகை வாகன சேவை

எமது சேவைகள்

அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஓய்வு
நலக் கொடுப்பனவு.
அங்கத்தவர், பணியாளர்களுக்கு இலவச மருந்து திட்டம்
பணியாளருக்கான நலன்புரித் திட்டம்.
முன்பள்ளி மானவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம்.
மானவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கல்.
அங்கத்தவர் பணியாளர்களுக்கான பயிற்சி நெறிகள்.
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்.
கொத்தணிப் பணியாளர்களுக்கான நலன்புரித் திட்டங்கள்.

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

சங்கானை வீதி
மானிப்பாய்.

தொ. பே: 021 225 5045
021 320 5159

சுன்னாகம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

எமது உற்பத்திகளும் சேவைகளும்

சுத்தமான பனை வெல்லம் உற்பத்தி

மகளீர் குழு உறுப்பினர்களுக்கு சுயதொழில் பயிற்சி

அங்கத்தவர்களுக்கு மாதாந்திரம் ஒய்வூதியம் வழங்கல்

வாடகை வாகன சேவை (ஹன்ரர்)

கிராமிய வங்கிச் சேவை

கல்விச் சேவை

முன்பள்ளிகளை நிர்வகித்தல்
அங்கத்தவர், பணியாளர் மற்றும்
மகளீர்குழு உறுப்பினர்களுக்கான
கல்விப் பயிற்சி

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

மின்சார நிலைய வீதி
சுன்னாகம்

தொ.பே : 021 224 0022

காரைநகர் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

எமது மண்ணின் தனித்துமான வளமான பனை வளத்தை பாதுகாத்து, வளப்படுத்தி எமது பொருளாதாரத்தை மேம்படுத்தப் பாடுபடுவோம்

எமது உற்பத்திகள்

ஓடியல்
புழுக்கொடியல்
பனாட்டு

போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள்

எமது சேவைகள்

கிராமிய வங்கிச் சேவை

இரு சக்கர உழவு இயந்திரம் (லான்ட் மாஸ்ரர்) சேவை

காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

அல்லின் வீதி, காரைநகர். T.P : 021 373 7754

கொடிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு
மலருக்கு எமது வாழ்த்துக்கள்

போத்தற் கள்
உற்பத்தி விற்பனை

கல்விச் சேவை
கல்வி மேம்பாட்டுத்
திட்டம்

கிராமிய வங்கிச்
சேவை

மகளிர்
மேம்பாட்டுத் திட்டம்

சமூக நலத்
திட்டங்கள்

கொடிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
பிரதான வீதி, கொடிகாமம்.
தொ.பே : 021 373 5262

கட்டுரைகள்

உளவியல் ரீதியான ஆலோசனை கூறலின் சிறப்புக்கள்

ஆலோசனை கூறலின் முக்கிய அம்சமானது மனித இன நல கோட்பாடு ஆகும். ஆலோசனை கூறல் என்பது தனியவன் மற்றும் அவனது பிரச்சனைகளை மையமாகக் கொண்டு அமைகிறது. மாறி வரும் இந்த நவீன உலகில் மனித வாழ்க்கையில் பெருகி வரும் சிக்கல்களுக்கும் பிரச்சனை களுக்கும் ஏற்ப ஒருவன் தன்னை அமைத்துக் கொண்டு தகுந்த பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு வாழ வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி மனித வளர்ச்சி நிலைகளின் போது இயல்பாகவே ஏற்படக் கூடிய வளர்ச்சிநிலை பிரச்சனைகளுக்கும் மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் மற்றும் கடமைகளுக்கும் ஒருவன் தன்னை மாற்றிக் கொண்டு புதிய சூழ்நிலைக்கு ஏற்ப தேவையான மாற்றங்களைத் தனக்குள் ஏற்படுத்திக் கொண்டு மன நலத்துடன் வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உளவியல் அடிப்படையிலான ஆலோசனை கூறல் என்பது தேவைக்கு ஏற்ப ப்ல பகுதிகளாக அமைகிறது. ஆலோசனை பெறுபவரின் வயது, தொழில், பிரச்சனை அடிப்படையிலும் ஆலோசனை கூறல் என்பது வகைப்படுத்தப்படுகின்றது உதாரணமான குடும்ப நல ஆலோசனை, மணவாழ்வு ஆலோசனை, தொழிலாளர் பெற்றோர்களுக்குரிய ஆலோசனை என பல நிலைகளில் ஆலோசனை கூறல் அமைந்துள்ளது.

ஆலோசனை கூறலின் முக்கிய பிரிவாக அமைவது குடும்ப குழு ஆலோசனை ஆகும். இது ஒரு குழு ஆலோசனை முறை என்பதன் தொடர்ச்சியாக அமைகிறது. குடும்பத்தில்

அமைந்துள்ளது குறிப்பாக பெற்றோர் குழந்தைகளிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என ஆலோசனை கூறுவது பெற்றோர்களுக்கு ஆலோசனை கூறல் என்று அமைகிறது. இத்தகைய ஆலோசனை பெற்றோர்கள் தங்களது குழந்தைகளைப் பற்றி சரியாக முழுமையாக அறிந்து கொண்டு அவர்களின் சிறப்பான வளர்ச்சிக்கு உதவ வழி கோளுகிறது மேலும் இளம் குற்றவாளிகளுக்கு கொடுக்கப்படும் ஆலோசனை கூறல் இளைஞர்கள் அழிவுப்பாதையில் செல்லாமல் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட வழி வகுக்கிறது எனலாம். அதே போல் திருமண நல் வாழ்வு ஆலோசனை நல்ல குடும்ப வாழ்க்கை வாழ வழி வகுக்கிறது மேலும் இன்றைய சூழ் நிலையில் பெண்களின் பிரச்சனைகளுக்கு சிறப்பான அம்சமாகும். இத்தகைய ஆலோசனைக்கும் பிறரை சார்ந்திருக்காமல் சுயசார்புத் தன்மையினை வளர்த்துக் கொள்ளவும் உதவுகின்றது.

திருமண வாழ்க்கை ஆலோசனை

திருமண வாழ்க்கை ஆலோசனை என்பது மிகவும் பரந்த விரிவான ஒன்றாக காணப்படுகின்றது. மூன்று பிரிவுகளாகச் செயற்படுகின்றது.

1. திருமணத்துக்கு முன்னதான ஆலோசனை
2. திருமணத்தின் போதான ஆலோசனை
3. மணவாழ்க்கை முறிவினைத் தடுத்து நிறுத்தத் தரப்படும் ஆலோசனை

மணவாழ்க்கை ஆலோசனை என்பது தனிநபர் ஆலோசனைக்கு ஒத்ததாக அமைந்துள்ளது. இவை இரண்டுக்கும் அதிக வேறுபாடு கிடையாது மணவாழ்க்கை ஆலோசனை கூறலின் மையமாக அமைவது கணவனோ மனைவியோ அல்ல ஆனால்

அவர்களது திருமண வாழ்க்கைத் தொடர்பின் தனிமையே ஆகும் இது திருமண சீரழிவு நெருக்கடி போன்ற நிலைமையினின்று தம்பதியினரைக் காப்பாற்ற மேற்கொள்ளும் முயற்சி ஆகும்.

பெரும்பாலும் தம்பதியினரிடையே மணவாழ்வு முறிவு ஏற்படக் காரணமாக அமைவது மூன்றாம் மனிதரின் தலையீடு நாளுக்கு நாள் அதிகரித்து தம்பதியினரிடையே மனக்குழப்பத்தினை உருவாக்கி அவர்களிடையே சீரளிவினை ஏற்படுத்துகின்றது. திருமண வாழ்க்கை முறிவு ஏற்பட இரண்டாவது காரணமாக அமைவது குடும்ப அமைப்பில் ஏற்படும் மாறுதல் ஆகும். திருமண முறிவுக்கு மூன்றாவது காரணமாக அமைவது தம்பதியினருள் யாரேனும் ஒருவருடைய உடல் நலக் குறைவு ஆகும். இவற்றைத் தவிர கணவன் மனைவி ஆகியோரின் விருப்பு வெறுப்பு போன்றவற்றினாலும் கருத்து வேறுபாடும் மனப் போக்கும் திருமண வாழ்க்கைக்கு விவாகாரத்தில் முடிய காரணமாக அமைகின்றது. திருமணம் என்பது ஒருவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியாக நிறைவான வாழ்விற்கு அத்திவாரமாக அமைந்துள்ளது. திருமண வாழ்வு என்பது பல பரிமாணங்களையும் கடமைகளையும் கொண்டதாகவும் அமைகிறது. சம்பிராதாயமான திருமணமானது ஒரு தூய பிணைப்பாக இரு உள்ளங்களது சங்கமமாக கருதப்படுகின்றது.

இன்றைய நாகரீக விஞ்ஞான தொழிநுட்பம் வளர்ச்சிகள் மேலோங்கிய உலகில் கணவன் மட்டுமின்றி மனைவியும் வேலைக்காக வெளியே செல்ல வேண்டியுள்ளது மற்றும் பொழுது போக்கு விருந்து நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் கலந்து கொள்ள வேண்டி நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களிலும் கணவணுக்கோ அல்லது மனைவிக்கோ இடப்படும் கட்டுப்பாடுகள் மணவாழ்விற்குள் குழப்பத்தை உண்டு பண்ணி விவாகாரத்து என்ற நிலைக்கு தள்ளுகிறது. இதன் காரணமாக இன்று ஐரோப்பிய நாடுகளில் மிக அதிகளவு திருமண வாழ்க்கை

ஆலோசனை வல்லுணர்களின் உதவியினை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நாடுகளில் திருமண வாழ்க்கை ஆலோசனை மையங்கள் பெருகி வருகின்றன. இவ் ஆலோசனைகளின் முக்கியத்துவம் அங்கு நன்கு உணரப்பட்டமையை காணக்கூடியதாக இருக்கின்றது பெருவாரியான திருமண வாழ்வு பொருத்தப்பாட்டுக்கு கேடு விளைவிப்பதாக அமைவது பால் உணர்வு நடவடிக்கை ஆகும். வயது வித்தியாசம், தாம்பத்திய உறவு சிக்கல் ஆகியனவும் கணவன் மனைவி பிரியக் காரணமாக அமைகின்றது. இவற்றினை எல்லாம் திருமண வாழ்வு ஆலோசகர்கள் அறிந்திருப்பது மிகவும் அவசியம் ஆகும். மணவாழ்க்கையின் தோல்விக்கும் சிக்கலுக்கும் பல காரணங்கள் உள்ளன அவையாவன ஒத்துணர்வு இன்மை, செயலாற்றல் இன்மை, பேச்சுத் தொடர்பு இன்மை, பொருளாதார நிலை சமூக அந்தஸ்து போன்ற நிலையும் மணவாழ்வுச் சீர்குலைவதன் முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

திருமணத்திற்கு முன்பு ஆலோசனை என்பது ஆண்,பெண் இருவரும் இணைய முன்பு இவர்கள் முன்பே ஒருவரை ஒருவர் குழந்தைப் பருவம் தொட்டே நன்கு அறிந்தவர்களாகவோ இல்லது உறவினர்களாகவோ அல்லது முன்பே அறிமுகமானவர்களாகவோ உடன் வேலை பார்ப்பவர்களாகவோ உடன் படிப்பவர்களாகவோ இருக்கலாம். அவ்வாறு இருப்பினும் திருமணத்திற்கு முன்பு ஒருவரை ஒருவர் நன்கு முழுமையாக புரிந்து கொள்ள மணவாழ்வு ஆலோசனை அவசியமானது இதனை மன வாழ்வு ஆலோசகர்கள் இவர்களுக்கு வழங்கல் வேண்டும். அதனை பெற்றுக் கொள்வதற்கு திருமணத்தில் இணைபவர்கள் முன்வர வேண்டும். இதுவே சிறப்பான இசைவான திருமண வாழ்விற்கான அத்திவாரமாகவும் அடிப்படையாகவும் அமைகின்றது பெரும்பாலான விவாகரத்து திருமண வாழ்வு முறிவு மற்றும்

குழப்பம் போன்றவற்றிக்குக் காரணமாக அமைவது கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாததேயாகும். இருவருடைய பிரிவு உணர்வு ஒத்துணர்வும் வளர உதவ வேண்டும் மேலும் உறவு விரிசல் அடைய இருவருக்குமிடையே பேச்சு வார்த்தை அற்ற நிலையும் தவறான செய்தித் தொடர்புமே ஆகும் சமயம் மற்றும் பொருளாதார காரணங்களாலும் மண வாழ்க்கை முறிவுக்கு காரணமாக அமைகின்றது. மனப்பான்மை வேறுபாடு ஜாதி சமய பழக்க வழக்கங்கள் ஆகியனவும் விரிசலை ஏற்படுத்துகின்றன. பெரும்பாலும் கணவன் மனைவியிடையே ஏற்படும் பிரச்சனையால் உணர்வு நடத்தை மண முறிவாகும் மனைவியிடம் பால் உணர்வு கிளர்ச்சியின்மையும் மந்த குணமும் கணவனது பால் உணர்வு நடத்தை செயலற்ற நிலையும் ஆண்தன்மையற்ற நிலையும் பால் உணர்வு நடத்தையில் சிக்கல்களை உருவாக்க கணவன் மனைவியிடையே இடைவெளியை ஏற்படுத்துகின்றது.

ஆலோசனை கூறலின் முதல் நிபந்தனை கூறும் வல்லுனர் பங்கினை மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இவர்களது பங்கு இருசாரரையும் ஒருவருக்கொருவர் நன்கு தெளிவாக புரிந்து கொள்ள உதவுவது மட்டுமே ஆலோசனை கூறும் வல்லுனர் தனது திறன்களை மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டும். அத்துடன் பெரும்பாலும் ஆலோசனை பெறுபவரை மையமாகக் கொண்ட அணுகுமுறையினைப் பயன்படுத்துவது நல்ல விளைவுகளைக் கொடுக்கும் ஆலோசனை கூறல் அமர்வு பற்றிய விபரங்கள் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்வது. ஆலோசனை அமர்வு என்பது நேரம் காலம் இடம் ஆகியவற்றினை முன்னரே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஆலோசனை கூறுபவர் ஒரு சில யுத்திகளையும் அறிவுகளையும் மட்டுமே வழங்குபவர். அதன் அடிப்படையில் முழு மனதுடனும்

உறுதியுடனும் ஆழ்ந்து செயற்பட்டு தங்களது பிரச்சனைகளுக்கு முடிவு காண்பது ஆலோசனை பெறுபவரின் முக்கிய கடமையாகும். இத்தகைய கடமையினை ஆலோசனை கூறுபவர் ஆலோசனை பெற வருபவரிடம் வலியுறுத்த வேண்டும். ஆலோசனை கூறுபவர் ஆலோசனை பெற வருபவரின் நம்பிக்கையினைப் பெற வேண்டும் சரியான இடைவெளியையும் அறிமுகத்தினையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் இவை ஆலோசனை கூறலின் வெற்றிக்கு உதவும்

குடும்ப ஆலோசனை

குடும்ப ஆலோசனை என்பது குடும்ப முறை மாற்றம் இவற்றினை ஒட்டியதாக அமைகிறது அத்தகைய மன அழுத்த அறிகுறி நீண்ட காலம் நீடித்து ஒருவனிடம் இருக்குமானால் அது குடும்பத்தில் உள்ள மாற்றங்களுக்கு தொல்லையினையும் துயரத்தினையும் அளிகின்றது. குடும்ப ஆலோசனையில் பல வகை உள்ளன.

1. ஒருங்கிணைந்த குடும்ப ஆலோசனை :-

ஆலோசனை கூறுபவர் குடும்ப அங்கத்தினர்களைச் சந்தித்து அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றி நன்கு புரிந்து கொள்கின்றார்கள் அத்துடன் குடும்ப அங்கத்தவர்களிடையே நிலவும் தொடர்பினையும் இடைவெளியினையும் இடைவெளியின் தன்மையையும் தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். இந்த ஒருங்கிணைந்த குடும்ப ஆலோசணை முறையில் குடும்ப அங்கத்தவர்கள் யாரும் தனியாக பேட்டி காணப்பட மாட்டார்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து ஆலோசனையாளர் பேட்டி காண்பார்.

2. குடும்ப ஆலோசனை கூறலின் பின்னர் வலை ஆலோசனை கூறல்:-

இதில் குடும்பத்தினரையும் அருகில் வசிப்பவர்கள், நண்பர்கள் உறவினர்கள் ஆகியோரை ஆலோசனை கூறுபவர் சந்திப்பார் இதன் முக்கியத்துவம் சமூகப்பின்னனி எவ்வாறு தனியாளுக்கு மாற்றும் குடும்ப அங்கத்தினர்களுக்குச் எங்கனம் துன்பத்தை அளிக்கிறது என்பதனை கண்டறிகிறது.

3. பல குடும்பங்களை இணைத்து ஆலோசனை கூறல்:-

இதில் பல குடும்பங்கள் ஒன்று சேர்க்கப்படும் ஒரே நேரத்தில் ஆலோசனை கூறல் இதில் பல குடும்பத்தை சேர்ந்தவர்களும் மற்றக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களைக் கண்ணுற்று உற்றுநோக்கி அறியவும் அவர்களைப் பின்பற்றவும் அவர்களுடன் குடும்ப ஒத்துணர்வுடனும் ஒப்பிட்டு நடந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இது சமூக செயற்பாட்டினை சிறப்பாகத் தூண்டவும் சமூகத் தடைகளை நீக்கவும் பெரிதும் உதவுகிறது.

ஆலோசனை கூறல் வளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் அமைப்பு முறை அணுகு முறையினரால் குடும்ப சிகிச்சை என்னும் கருத்து உருவாக்கப்பட்டது. குடும்ப ஆலோசனை கூறலின் முக்கிய குறிக்கோள் புதிய வாழ்க்கை முறையினை உருவாக்குதல் ஆகும். இம்முறை மக்கள் தங்களது மன எழுச்சிகளை வெளிக்காட்ட உதவுகிறது. அதன் நோக்கங்கள் நல்ல குடும்ப தொடர்பு புதிய அனுபவங்கள் தோன்ற வாய்ப்பும் முக்கிய அனுபவங்களை தொடரவும் வாய்ப்பு அளிப்பது ஆகும். குடும்ப ஆலோசனை ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இணைந்து செயற்படவும் அன்னிய அயலவர் பாடசாலை அலுவலகம் மற்றும் சமூகத்தில் சிறப்பாகச் செயற்படவும் உதவுகிறது.

குடும்பம் என்பது சமூகத்தின் அடிப்படை அங்கமாகும் குடும்பத் தொடர்புகள் இரண்டு வகைப்படும் ஒன்று பெற்றோர் குழந்தை தொடர்பு, இரண்டாவது கணவன் மனைவி தொடர்பு இத்தகைய தொடர்பில் சிக்கல் ஏற்படாமலும் ஒருவரை ஒருவர் துவேசம் பாராட்டாமலும் இருக்க குடும்ப ஆலோசனை பெரிதும் உதவுகிறது.

பெற்றோருக்கு ஆலோசனை

பெற்றோருக்குரிய ஆலோசனையின் முக்கிய அம்சம் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் உணர்வுகளையும்

விருப்பு வெறுப்புக்களையும் புரிந்து கொண்டு அதற்கு அமையத் தக்க முறையில் தங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது குழந்தைகளின் ஆளுமைத் தன்மை, ஆர்வங்கள், குறிக்கோள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு செயற்படுவது மற்றும் சுதந்திரம் வழங்குவதன் மூலம் குழந்தைகள் தங்களது விரும்பத்தக்க தனித்தன்மைகளை வளர்ப்பதற்கு உதவுவது குழந்தைகளிடம் காணப்படும் குறைபாடுகளைப் பெற்றோர்கள் சரியான முறையில் உணர்ந்து குறைபாடுகள சரிசெய்து கொள்ள உதவுவது குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மை தோன்ற இடம் அளிக்காமல் நம்பிக்கை எண்ணத்துடன் செயல்படும் மனப்பக்குவத்தினை உருவாக்குதல் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுகிறது.

பெண்களுக்குரிய ஆலோசனை

நவீன யுகத்தில் பெண்களுக்குரிய ஆலோசனை என்பது முக்கிய பகுதியாக அமைகிறது. தற்போதைய காலகட்டத்தில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக பலதரப்பட்ட வேலைகளையும் கடமைகளையும் ஆற்ற வேண்டி உள்ளது ஆண்களை விட ஒருபடி மேலாக பல பொறுப்புக்களுடன் குடும்ப நிர்வாகம் என்ற தனிப்பொறுப்பையும் ஏற்று நடத்த வேண்டியுள்ளது. எனவே அவர்கள் எளிதில் மனமுறிவும் படபடப்பும் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அத்துடன் குழந்தை வளர்ப்பு, கடமை என்பது பெண்களின் தனிப்பட்ட கடமையாக அமைகிறது. இத்தகைய பொறுப்புக்களை சிறப்பாக ஏற்று நடாத்த பெண்களுக்கு பிரத்தியேக ஆலோசனை தேவைப்படுகிறது.

வேலைவாய்ப்புக்களிலும் பெண்களுக்கு இன்று அதிக வாய்ப்பும் முன்னுரிமையும் உள்ளது. இவற்றினைத் தக்க முறையில் பயன்படுத்தி வெற்றிகரமான வாழ்க்கையினை நடாத்த

இவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும் பெண்களுக்குரிய ஆலோசனையின் முக்கியத்துவம் குறிப்பாக கீழ் கண்டவாறு செயற்படுத்துவது சிறந்தது ஆகும்.

1. திருமணம் ஆகாமல் தனித்து வாழும் பெண்கள்
2. திருமணம் ஆகி குழந்தைப்பேறு இல்லாமல் வாழும் பெண்கள்
3. அதிகமாகக் குடும்பப் பொறுப்புக்களைச்சுமக்கும் பெண்கள்
4. நடுத்தர மற்றும் வயோதிப வயது பெண்கள்
55.குழந்தை மற்றும் கணவனினால் புறக்கணிக்கப்பட்ட பெண்கள்
6. போரினால் கணவனை இழந்த பெண்கள்.

மேற்கூறப்பட்ட வகைக்கு தகுந்த ஆலோசனைகளை அவர்கள் மனநலத்துடன் ஆக்கபூர்வமான வாழ்க்கையினை மேற்கொள்ள உதவுகிறது.

ஆலோசனை கூறல் என்பது நோக்கத்துடன் இயக்க அடிப்படையில் செயற்படுவதாகும் இதன் முக்கிய குறிக்கோள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தகுந்த பொருத்தப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு சிறப்பாக வாழ வழிவகுப்பதாகும் தனியார்களின் பொருத்தப்பாடு நடைமுறையினை அறிந்து தக்க முறையில் ஆலோசனை கூறுபவர் செயற்பட வேண்டும்.

ஆலோசனை கூறலின் வெற்றியானது ஆலோசனை கூறுபவர் ஆலோசனை பெறுவருடன் எத்தகைய உறவினை மேற்கொள்கிறார் என்பதைப் பொறுத்து அமைகிறது. ஆலோசனை வழங்குபவர் நட்புணர்வுடனும் பரிவு உணர்வுடனும் ஆலோசனை பெறுபவரின் நம்பிக்கையினைப் பெறும் வகையிலும் தொடர்பு கொள்ள வேண்டும். ஆலோசனை பெறுபவர் இவர்களுக்கிடையே நல்ல பேச்சு தொடர்பு நெருக்கமானதாக அமைய வேண்டும்.

ஆலோசனை கூறல் எனும் செயல் தொடரப்பட முன் அதற்குரிய அமைப்பு முறையினை திட்டமிட்டுக் கொள்ள

வேண்டும். ஆலோசனை பெற வருபவரிடம் இருந்து என்ன மாற்றத்தை பெற விரும்புகின்றோமோ அதற்கு தேவையான காலநேரம் அவகாசம் முறைகள் ஆகியவற்றை முன்கூட்டியே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் ஆலோசனை பெற வருபவர் சிலவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்க கூறும் தனது அர்த்தங்கள் வெளிப்படுகிறது என்ற நிலையிலோ அல்லது தங்களது தன்மான உணர்வு பாதிக்கப்படுகிறது என்று நினைத்தாலோ அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் சூழ்நிலை உருவாகுகின்றது. எனவே அத்தகைய எதிர்ப்புக்களை ஆலோசனை கூறுபவர் தங்களது திறமையான அணுகுமுறையால் சமாளித்து ஆலோசனை கூறலில் வெற்றி காண வேண்டும்.

இவ்வாறு பல தரப்பட்டவர்களுக்கு ஆலோசனை கூறலின் மூலம் அவர்களும் சமூகத்துடன் ஏனையோருடன் சமமாக பங்குபற்ற வாய்ப்பு ஏற்படுத்துகின்றது என்பதை குறிப்பிடலாம்.

திரு.நி.பொ.ஜேசுராசா
பொதுமுகாமையாளர்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்
கோண்டவில்

எல்லோருக்கும் எம்மைப் பிடிக்க வேண்டும் என நினைத்து சுயம் இழந்து வாழ்வதைவிட சிலருக்கு மட்டும் பிடித்தால் போதும் என திமிருடன் வாழ்வதே மேல்.

தன்னம்பிக்கை

அச்சுவேலி ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

உற்பத்திகள்
போத்தல் கள், பதநீர், பனம்பாணி,
பனைவெல்லம், கல்லாக்காரம்

கிராமிய வங்கி
சேமிப்பு வைப்புக்கள்
நிலையான வைப்புக்கள்
கடன் திட்டம்
வெஸ்ரன் யூனியன்
முகவர் சேவை

வாம் கோப் சிற்றி

பல்பொருள்
வாணிபம்
பாடசாலை
உபகரணங்கள்
நிழற்பட பிரதி

WESTERN UNION
MONEY TRANSFER

சேவைகள்

வந்தல் வாடகை,
கதிரை வாடகை, வாகன
சேவை, நலன்திட்ட
சேவைகள் கல்விச் சேவைகள்

அச்சுவேலி பனை
தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
(வ-து)

யாழ் - பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி.
தொலை,பேசி :
021 321 3566,
021 7451900

தொலைநகல் : 021 7451901

மானிப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீவம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

பனை தென்னை வளத்தின்
பலமிகு உறுதித் தன்மையின் மேலும்
உயர்ந்திட நாமும் வாழ்த்துகின்றோம்.

எமது சேவைகளும் செயற்பாடுகளும்

போத்தலில் அடைக்கப்பட்ட
சுவையூட்டப்பட்ட
பதநீர்

சுத்தமான
முறையில்
தயாரிக்கப்பட்ட
பனை வெல்லம்

கிராமிய
வங்கி

முன்பள்ளிகளை நிருவகித்தல்

ஓய்வூதியம் மற்றும்
சமூகநல மேம்பாட்டுத்
திட்டங்கள்

கற்பகதரு
விற்பனை
நிலையம்

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்

பிரதான வீதி,
மானிப்பாய்.

தொ.பே : 021 225 5109

கோப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

10வது ஆண்டு சிறப்பு மலர்
கற்பக தீபம் மலர வாழ்த்தி நிற்கின்றோம்.

எமது வியாபார நடவடிக்கைகள்

கள் கொள்வனவு, விற்பனை
போத்தற் கள் உற்பத்தி, விற்பனை
சுவையூணவு விற்பனை
நிழற் பிரதியாக்கற் சேவை

எமது வாடகைச் சேவைகள்

கட்டடம் (கடை)
வாகனம்
பிளாஸ்ரிக் கதிரைகள்

எமது நலத்திட்டங்கள்

அங்கத்தவர் பணியாளர்களுக்கான ஓய்வூதிய திட்டம்
அங்கத்தவர் பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்பு
பாலர் பாடசாலைகளை இயக்குதல்
பொது நிகழ்வுகளுக்கும், பாடசாலை விளையாட்டு நிகழ்வுகளுக்கும் அன்பளிப்பு வழங்குதல்.

கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

தொ.பேசி:
021 223 0395

யாழ்ப்பாணம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

போத்தல்கள் உற்பத்தி விற்பனை
பனை வெல்வம் விற்பனை
சுவை உணவு விற்பனை

எமது உற்பத்தி விற்பனை மற்றும் சேவைகள்

கல்விச் சேவை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
க.பொ.த (சா/த) சித்தி
பெற்ற, பல்கலைக்கழக
அனுமதி கிடைக்கப்பெற்ற
மாணவர்களுக்கு நிதி உக்குவிப்பு
வழங்கி கௌரவித்தல்.

கிராமிய வங்கிச் சேவை

நலன்புரிச் சேவைகள்
ஓய்வுபெற்ற அங்கத்தவர்,
பணியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இல. 330, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 021 222 2492

பொருளாதாரமும் கூட்டுறவும்

இலங்கையில் பொருளாதார உறுதிப்பாடு மிகவும் அவசியமானதொன்றாகும். வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தொழிட்நுட்ப மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் ஏற்ப உற்பத்தி துறையில் மாற்றங்களுக்கு ஊடக அமைப்பு வசதிகளும் மாற்றியமைக்கப்பட வேண்டும். வர்த்தக ஒப்பந்தங்கள் விரிவுபடுத்துவதன் மூலம் அபிவிருத்தியை துரிதப்படுத்த முடியும் ஏற்றுமதி இறக்குமதி பன்முகப்படுத்தல் மூலம் நிதி முகாமையும் ஸ்திரத்தன்மையும் பேண முடியும் கேள்விக்கேற்ப நிரம்பலை அதிகரிப்பதன் மூலம் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பை அதிகரிப்பதுடன் உலகசந்தையில் முக்கிய இடத்தை வகிக்க முடியும். அரசதொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் வினைத்திறன் செயற்பாட்டை முன்னெடுக்கவும் சரியான முகாமைத்துவம் வேண்டப்படுகின்றது. மாற்றமுறும் சூழலும் உகந்ததாக வர்த்தக கொள்கைகளை இதன் மூலம் பேணமுடியும் தொழிநுட்பங்களை அதிகரிக்கப்படவேண்டும்.

இத்தகைய பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஊன்று கோலாக அச்சாணியாக விளங்குவது கூட்டுறவு அமைப்புக்கள் என்றால் மிகையாகாது. கிராமத்தில் வாழும் விவசாயிகளும் சிறுகைத்தொழிலாளர்களும் பலருடன் ஒன்று சேர்ந்து கூடி உழைத்தல் மூலம் வெற்றிகளைப் பெற்றதை நாம் வரலாற்றில் நன்கு அறிவோம். "குருடர்களாகவும் முடவர்களாகவும் வாழ்ந்த இரட்டையர் என்ற இருவரலாற்றில் புகழ்பெற்ற புலவர்கள் ஒவ்வொருபேரும் தனிச்சிறப்பாக வாழ முடியாமையால் குருடனின் தோளில் முடவன் ஏறி இருந்தும் குருடனுக்கு வழிகாட்ட குருடன் முடவனைச் சுமந்து பல அரச மாளிகைக்கு சென்று சிறந்த பாடல்களைப் பாடி பரிசு பெற்ற கதையும் வேடன் இட்ட வலையில் சிக்கிய புறாக்கள் ஒன்று சேர்ந்து வலையைத்தூக்கிச் சென்று தப்பிபிழைத்த புறாக்களும் ஒன்று கூடி உழைத்தலுக்குச் சிறந்த வரலாற்றுச் சான்றுகள்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை "கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் வாசகங்களை தன்னகத்தே கொண்டு ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் என்ற கொள்கைக்கிணங்க அங்கத்தவர்களின் பொருளாதார நன்மை கருதி தன்னிச்சையாகவே ஒன்றிணைந்து தமது பணத்தினை மூலதனமாக இட்டு உருவாக்கப்படும் வணிக அமைப்புக்களே கூட்டுறவு ஆகும். இவை 1972 ஆண்டு 5ம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தின் அடிப்படையில் பதிவு செய்து உருவாக்கப்படுவன ஆகும். இதன் பண்புகள் ஆவன.

i. ஜனநாயக நிர்வாக முறை

ii இலாப நோக்கமற்ற தன்மையில் செயற்படல்

iii மிகை அனுகூலங்கள் அங்கத்தவர்களிடையே பகிரப்படல்

iv அங்கத்தவர் நலனுக்காக செயற்படல்

கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே கூட்டுறவு அமைப்பின் பிரதான நோக்கமாகும். இவை மக்களால் மக்களுக்கு உருவாக்கப்பட்ட மக்களால் ஜனநாயகமுறைப்படி நிர்வகிக்கப்படுகின்ற பொருளாதார கலாச்சார தேவைகள் நிறைவு செய்வதற்காக அயராது உழைப்பதால் பூரணத்துவமான சமூக நிறுவனங்களாக விளங்கின.

கூட்டுறவுக் கொள்கையில் சமூக மேம்பாடு ஒரு முக்கிய கொள்கையாக விளங்குவதினாலும் கூட்டுறவு நிறுவனங்கள் பொருளாதாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளன. இவை இலாப நோக்கமில்லாத சேவை நோக்குடன் சமூகத்திற்கு தேவையான சகல அத்தியாவசிய தேவைப்பொருட்களையும் சரியான அளவு நிறையுடன் கலப்படமில்லாது தரமானவையாக நியாயமான விலையில் சகலருக்கும் பங்கிட்டு கொடுப்பதால் கூட்டுறவு பொருளாதார வளர்ச்சிக்கு மூலவேராகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களின் ஏனைய கூட்டுறவுக் கொள்கைகளும் ஜனநாயக நிர்வாகமும் கட்டுப்பாடும் தடையற்ற சுயேச்சையான அங்கத்துவம் அங்கத்தவர்களின் பொருதார

பங்களிப்பு சுதந்திரமாகவும் தொழிற்படுதல் கல்வி பயிற்சி தகவல் திரட்டல் கூட்டுறவு சங்கங்களுக்கிடையே கூட்டுறவு சமூக மேம்பாடு போன்றனவாகும்.

கூட்டுறவுக் கொள்கைகளும் சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனம், சேமிப்பு, ஒற்றுமை, விடாமுயற்ச்சி, சுறுசுறுப்பு போன்ற கூட்டுறவுப் பண்புகளும் மனித நேயமும் மிக்கவையாகும். சமூகமேம்பாட்டுக்கு உரமாகவும் விளங்குகின்றது இவை மனித சமூகத்திற்கு எதிரான முதலாளித்துவச் சுரண்டல்கள் என கறுப்புச்சந்தை பதுக்கல், அநியாயவிலை, அளவு நிறை குறைத்து விற்றல் போன்றவற்றை முற்றாக நீக்கி அரும்பெரும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

கூட்டுறவு நிறுவனங்களில் அங்கத்தவர்கள் அனைவருக்கும் சகல ஜனநாயக உரிமைகளும் பூரணமாக வழங்கப்பட்டு வருகின்றது. கூட்டுறவு நிறுவனங்கள் அங்கத்தவர்களின் நுகர்வு, விநியோகம், விவசாய அபிவிருத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, வங்கிச் சேவைகள், உபகரணம், பசளை வகை விநியோகம், கால்நடை அபிருவித்தி, தொழிநுட்பம் வழங்கல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல், போக்குவரத்து வசதிகளையும் கல்விக்கான வசதிகளையும் ஏற்படுத்தல் போன்ற சமூக மேம்பாட்டுக்கான பல சேவைகளை வழங்கி வருகின்றன.

முதலாளித்துவ பொதுவுடமைப் பொருளாதாரம் சமூக அமைப்பையும் கலப்பு பொருளாதார சமூக அமைப்பையும் ஏற்படுத்த கூட்டுறவு அயராது உழைப்பதுடன் எமது சமூகங்களின் சகல பிரச்சனைகளையும் முற்றாக மறுப்பதற்கு கூட்டுறவு நிறுவனங்கள் பெரிதும் கைகொடுத்து உதவுவதனால் இந்நிறுவனங்கள் சமூகத்திற்கு பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன.

உலகிலுள்ள அரச நிறுவனங்கள், கம்பனிகள், பங்குடமைகள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றுடன் கூட்டுறவு நிறுவனங்களை ஒப்புநோக்கும் போது சமூகத்திலுள்ள எல்லா நிறுவனங்களையும் விட புனிதமான பண்புகளைக் கொண்ட நிறுவனங்களாக இவை விளங்குகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களின் உலகத்தை தழுவும் தன்மை உலகத்தை ஒரு உலக கூட்டுறவுச்சமூகமாக கட்டி எழுப்புதல் போன்றவற்றையும் உலகம் முழுவதையும் ஒரு உலக ஒன்றுபட்ட கூட்டுறவு சமூகமாக உருவாக்குவதே கூட்டுறவின் புனிதமான இலட்சியம் ஆகும்.

அரசாங்கம் தனது பணிகளைச் சிறப்பாக நிறைவு செய்வதற்கு கூட்டுறவு பங்களிப்புச் செலுத்துவதும் ஒரு சமூக மேம்பாட்டுபணிதான் ஆனால் கூட்டுறவு நிறுவனங்கள் அரசபணிகளுக்கு 80வீதத்திற்கு மேற்பட்ட முக்கியத்துவம் கொடுப்பதினால் அங்கத்தவர்களின் பொருளாதார சமூக கலாச்சார அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களை உருவாக்கி அவற்றைச் செயற்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

இங்கிலாந்து, ஜேர்மனி, சுவீடன், இத்தாலி, டென்மார்க், இஸ்ரேல், கனடா, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள் அரச பணிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அங்கத்தவர்களின் பொருளாதார சமூக கலாசாரப்பணிக்கே கூடிய முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

எமது நாட்டிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களை மேலைத்தேய நாடுகளிலும் ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் போன்று முழுமைத்துவமான மக்கள் நிறுவனங்களாகவும் சமூகநிறுவனங்களாகவும் காலம் பிந்தாமல் உருவாக்க வேண்டியது கூட்டுறவாளர்களுக்கு காலம் விதித்துள்ள பெரும் பணியும் கடமை ஆகும்.

திருமதி சிவரஞ்சினி ஸ்ரீகாந்
ஆசிரியர் (B.COM.D.ED)
யா /மானிப்பாய் மகளிர் கல்லூரி

உதவிக்கு யாரும் இல்லை என வருந்தாதே,
உனக்குத் துணையாக நான் இருக்கின்றேன்..
தைரியமாயிரு

இப்படிக்கு
தன்னம்பிக்கை.

கரவெட்டி ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

எமது செயற்பாடுகளும் சேவைகளும்

போத்தற்கள் உற்பத்தி

பல்பொருள் விற்பனை நிலையம்

கிராமிய வங்கிச் சேவை

உழவு இயந்திர வாடகை சேவை

நலத்திட்ட செயற்பாடு

கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

தொ.பே:021 321 6451

வடமராட்சி ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலர் அழகுற
எமது நல்வாழ்த்துக்கள்!

எமது செயற்பாடுகளும் சேவைகளும்

போத்தற் கள் உற்பத்தி

சுகாதார முறைப்படி போத்தலில்
அடைக்கப்பட்ட சுவையான
தரமான பனங்கள்.

எதிர்காலத் திட்டங்கள்

அங்கத்தவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயற்படுத்தல்

கிராமிய வங்கிச் சேவையை ஆரம்பித்து சேமிப்பு மற்றும்
கடன் வழங்கலை மேற்கொள்ளுதல்.

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
குடத்தனை கிழக்கு, குடத்தனை.
தொ.பே:021 491 3754

தெல்லிப்பளை ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

கிராமிய வங்கிச் சேவை
- அங்கத்தவர் நிலையான வைப்பு
- அங்கத்தவர்களுக்கான கடன் வழங்கல்

கல்வி அபிவிருத்தி திட்டம்
- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
- அங்கத்தவர்,பணியாளர்
- மகளீர்குழு உறுப்பினர்களுக்கான கல்விப் பயிற்சி

உற்பத்திகள்
- போத்தல்கள்
- பனை வெல்லம்
- கல்லாக்காரம்
- பனாட்டு
- ஒடியல், புழுக்கொடியல்

சமூக நலத்திட்டங்கள்

தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

வரையுள்ளது

வைத்தியசாலை வீதி
தெல்லிப்பளை

T.P. 021 321 1351

பண்டத்தரிப்பு ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு
மெது வாழ்த்துக்கள்

உற்பத்திகள்

- பனை வெல்லம்
- கல்லாக்காரம்
- போத்தலில் அடைக்கப்பட்ட பதநீர் பனம்பாணி
- புழுக்கொடியல்

கிராமியவங்கிச் சேவை

அங்கத்தவர் கட்டாய சேமம் பேணல், அங்கத்தவருக்கு கடன் வழங்கல்.

கல்வி ஊக்குவிப்பு திட்டம்

- முன்பள்ளிகளை நிர்வகித்தல்
- உறுப்பினர், பணியாளர், மகளிருக்கான கல்விப் பயிற்சி

வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம்

மகளிருக்கான அபிவிருத்தி திட்டம்

- தையல், அழகுக்கலைப் பயிற்சி
- சுய தொழில் ஊக்குவிப்பு

பண்டத்தரிப்பு பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

தொ.பே : 021 300 1952

வேலணை ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு
மலருக்கு எமது வாழ்த்துக்கள்

எமது உற்பத்திகளும் சேவைகளும்

போத்தற் கள், பதநீர் தயாரிப்பு

கிராமிய வங்கிச் சேவை

பாம் கோப் சிற்றி

சுவையுணவு

வாடகைத் தண்ணீர்த்தாங்கி

வாடகை பிளாஸ்ரிக் கதிரைகள்

வாடகைப் பந்தல்

கல்வி ஊக்குவிப்புச் சேவை

நலன்புரித் திட்டங்கள்

வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

1ம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை

தொ.பே : 021 321 0083

சங்கானை ப. தெ. வ. அ. கூ. சங்கம்

கற்பக தீபம் 10வது ஆண்டு சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்

பிரதான செயற்பாடுகள்

★ கிளை நிலையங்களை நவீனப்படுத்தி விற்பனையினை அதிகரித்தல்.
★ பாரிய தொழிற்சாலை அமைப்பில் போத்தற்கள் உற்பத்தி செய்தல்.
★ மீதமான சாற்று உற்பத்திகளை வடிசாலைக்கு வழங்குதல்.
★ கிளை ரீதியான சுவையூணவு விற்பனை செய்தல்.
★ நிழற்பட பிரதி சேவை.

கிராமிய வங்கிச் சேவை

- அங்கத்தவர் சேமிப்பை அதிகரித்தல்.
- அங்கத்தவர் அல்லாதோரின் நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல்.
- அங்கத்தவர்களின் நிலையான வைப்புக்கு எதிரான கடன் வழங்குதல்.
- அங்கத்தவர்களுக்கான கடன் வழங்குதல்.
- ஒய்வுதியம் வழங்குதல்.

அங்கத்தவர் நலத்திட்டம்

- அங்கத்தவர் வழ்வ்துரைக் கௌரவ்வை.
- சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு.
- விபத்து மரணக் கொடை.
- கல்வியும் பயிற்சியளிப்பும்.

கல்விசார் சேவைகள்

* சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வுக்கு அன்பளிப்பு ஆசிரியர்களுக்கு வேதனமும் வழங்கல்.
* அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி.
* தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கல்.
* அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் வழங்குதல்.

வாடகைச் சேவை

☞ வாடகை வான் சேவை

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

பொன்னாலை வீதி,
சங்கானை.

தொலைபோசி
021 373 5403

சிறுகதை

அறுவடை

மகாதனைக் கிராமத்திலும் அதனை அண்டிய அயற் கிராமங்களிலும் சிறியோர் முதல் முதியோர் வரையிலும் "மனேச்சர்" என்றே அன்புரிமையுடன் அழைத்துக் கொள்வார்கள் இவ்வாறு அழைத்துக் கொள்வதனை பல தசாப்தங்களாக வழக்கப்படுத்திக் கொண்டதனால் இவரினுடைய உண்மையான பெயர் வழக்கிழந்து போய்விட்டது.

"மனேச்சர்" என அழைக்கப்படுகின்றவருக்கு பெற்றோர் வைத்த பெயர் சிவசண்முகவிநாயகம் என்பதாகும். சிறு வயதில் இவர் தனது பெயருக்குரிய காரணத்தை அறிந்திட வாய்ப்பு இருக்கவில்லை, அக் கால வழக்கப்படி இவர் தனது தந்தையாரை ஐயா என்றே அழைத்து வந்தார்.

கல்வியிலும் ஏனைய செயற்பாடுகளிலும் மிகவும் கெட்டித்தனம் உடையவராக இருந்தமையால் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியரும் சட்டம்பியார்களும் இவனிடத்தில் காணப்பட்ட ஆற்றலினால் விசேடமான கணிப்பினை பெற்றுக்கொண்டான். அதுமட்டுமன்றி மிகவும் அமைதியான போக்கினையும் கடைப்பிடித்துக் கொண்டமையும் இந் நிலைக்கு காரணமாக அமைந்திருந்தன.

இத்தகைய நிலைமையினை இவனுடன் கல்வி பயில்கின்ற சகமாணவர்களில் சிலர் ஏற்றக்கொள்ள முடியாதவர்களாகினர். ஆனாலும் படிப்பு விடயத்தில் போட்டி போட்டு வெற்றி பெற முடியாதவர்களாக இருந்தமையால் வேறு வகையில் இவனுக்கு நெருக்குதல் கொடுத்தனர்.

தாம் செய்த தவறுகளை அமைதியாகவிருந்த இவன் மீது பொறுப்பாக்கினார் அத்தகைய தவறுகளை அவன் செய்ததாக

எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை இச் செயற்பாட்டினால் தாம் நினைத்தவை நடக்கவில்லை என்பதால் அவனுடைய பெயரை வைத்து நக்கல் நளினம் பேசத் தொடங்கினார்.

உன்னுடைய பெயர் அச்சுவேலி தென்னம்பிள்ளை மாதிரி வளர்ந்திருக்கு. புங்குடுதீவுப் பாலம் போல நீண்டிருக்கு என்றும் உனக்கு பெயர் வைத்தவை இன்னும் கொஞ்சம் நீட்டியிருக்கலாம் தானே? என்றெல்லாம் அங்கதப் பேச்சுக்களை கட்டவிழ்த்துக் கொள்வார்கள். இதனால் இவன் வீட்டில் வந்து தனது தாயாருடன் அடிக்கடி தர்க்கித்துக் கொள்ளத்தவறுவதில்லை.

அந்த வேளைகளிலெல்லாம் என்ரை ராசாவின் பெயரின் சிறப்பு அவங்களுக்கு எங்கை தெரியப்போகுது என்ரை ஐயான்ர பெயரின்ர பெருமை எமக்கல்லவோ தெரியும் என்று கூறுவார்களே தவிர அந்த பெயரின்ர சிறப்பை அவர்கள் கூறுவதாகவில்லை.

ஒரு நாள் இவன் ஐயாவிடம் விடாப்பிடியாக கேட்டான் ஏன் எனக்கு இப்படியான பெயரை வைச்சனிங்கள்.

உனக்கு முன்னர் 5பேர் பிறந்து அவர்கள் எல்லாம் பிறந்து சில வாரங்களிலும் சில மாதங்களிலும் எம்மை விட்டுச் சென்று விட்டனர். அதனால் எமக்குஎனிமேல் எதிர்காலச் சந்ததியில்லை என்கின்ற நிலைமை ஏற்பட்டதனால் நாம் கஸ்ரப்பட்டு வாயை கட்டி வயிற்றைக் கட்டி சிறுக சிறுக சேகரித்து வைத்த தேட்டங்களை எல்லாம் யாரோ அனுபவிக்கப் போகின்றார்கள். அதுகுமில்லாமல் எமது வம்சம் எம்முடன் அழிந்து விடப் போகின்றது என்னும் பயத்தினாலும் போகாத கோவிலில்லை செய்யாத நேர்த்தியில்லை காணாத வைத்தியர் இல்லை இருந்தும் ஒரு பயனும் கிடைத்த பாடில்லை.

தெய்வத்தால் ஆகாதது எதுவுமில்லை என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்து சிவனையும் அவருடைய மைந்தர்களையும் விடாப்பிடியாக பற்றுடன் தொடர்ந்து கைதொழுதே உன்னைப் பெற்றெடுத்தோம்.

நீ பிறந்தவுடன் மகிழ முடியாதவர்களாகவும் பிறப்பு பதியவும் இயலாதவர்களாகவும் நாம் சஞ்சலப்பட்டவர்களாகினோம் உனக்கு

முன்னம் பிறந்தவர்களுக்குப் பெயர் வைத்தோம் அவர்களும் அவர்களின் பெயரும் நிலைத்திருக்காமையால் உனக்கு பிறப்பு பதியும் விடயத்தை நாங்கள் காலங் கடந்து உடையவரின் சிரமங்களுக்கும் பலவிதமான விடுப்புகளுக்கும் முகம் கொடுத்தே பிறப்பைப் பதிவு செய்தோம்.

இறைவனின் கருணையால் கிடைத்தமையாலேயே உனக்கு! அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டவர்களாக உனது பெயரை சிவசண்முகவிநாயகம் எனப்பெயர் வைத்துக் கொண்டோம். அத்தகைய சிறப்புக்களைப் பற்றி உன்னை எள்ளிநகையாடும் கேடுகெட்டதுகளுக்கு எங்கே விளங்கப்போகுது என ஒருவர்மாறி ஒருவர் தனது பெயர்சூட்டும் படலத்தின் வரலாற்றினை கூறியபோதுதான் அவரது மனம் ஆறுதல் கொண்டது.

இறைவனின் கருணையால் கிடைக்கப்பெற்ற சந்ததிப் பேற்றுக்குரிய மகனை கண்ணைஇமை காப்பதுபோல் கண்ணும் கருத்துமாக சகல கருமங்களிலும் பேணி பாதுகாத்து வளர்த்து வந்தனர்.

இவன் படிப்பில் பெரிய சுட்டியாக காணப்பட்டமையால் சட்டம்பியார்கள் பலர் இவனை நகர்ப்புறத்திலுள்ள. உ_யர்தர பாடசாலைகளில் விட்டுப் படிப்பித்தால் எதிர்காலத்தில் வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ வரக்கூடிய ஒருவன் எனக் கூறியிருந்தும் அத்தருணத்தில் நகர்ப்புற பாடசாலை விடுதியில் நின்று படிக்க கூடிய பொருளாதாரமும் ஏனைய வசதிகளுமிருந்தும் தாம் அருமை பெருமையாக தவமிருந்து பெற்ற ஒரே மகனை செல்லம்ஆச்சி தனது சீலைத்தலைப்பில் வைத்து வளர்த்து வந்தார்.

வைரவனுக்கு தனது மகனை நகர்ப்புறப் பாடசாலையில் விட்டுப்படிப்பிக்க விருப்பப்பட்ட நிலையிலும் தனது மனைவி செல்லத்தினால் முன்வைக்கப்பட்ட கருத்துநிலையிலிருந்து விலக முடியாதவராக இருந்தமையினால் மகனை தூர இடத்திற்கு விட்டு படிப்பிக்காது தமது கண்பார்வைக்குட்படுத்தி, தமது ஊர் சைவப்பள்ளிக்கூடத்திலேயே படிப்பித்து வந்தனர்.

ஊரிலே சைவப்பள்ளிக்கூடம் வேதப்பள்ளிக்கூடம் என இரண்டு பாடசாலைகள் நடத்தப்பட்டு வந்தன. சைவப்பள்ளிக்கூடத்தை சைவர்களும், வேதப்பள்ளிக்கூடத்தை

வேதக்காரரும் நடாத்தி வந்தனர். இவர்களது வீட்டிற்கு மிகவும் அருகிலுள்ள பள்ளிக்கூடம் வேதப்பள்ளிக்கூடம். அவ்வாறு இருந்தும் தமது பார்வைக்குட்பட்டதான அப்பாடசாலைக்கு விடாது சற்றுத்தொலைவிலிருந்த சைவப்பள்ளிக்கூடத்திலேயே படிக்க விட்டனர்.

மகனை பள்ளிக்கூடத்திற்கு கொண்டு சென்று விடுவதும் கூட்டி வருவதுமென இவர்களின் பணியாகவிருந்தது. இத்தருணத்திலெல்லாம் ஏன் செல்லம் படலேக்கையுள்ள பள்ளிகூடத்திற்கு பிள்ளையை விட்டிருக்கலாம் தானே? மத்தியான வெய்யிலில் நடந்துபோய் மகனை கூட்டி வருகின்றாய். ஒரு நாளைக்கு இரண்டு தடவை சைவப்பள்ளிக்கூடத்திற்கு போய் வருகின்றாய் கஸ்டம்தானே என கேட்பவர்களுக்கு நான் கஸ்ரப்பட்டாலும் தவமிருந்து பெற்றெடுத்த என் பிள்ளை அதிலும் என்ர பாவத்திற்கு இரங்கி எம்மை படைத்தவன் போட்ட பிச்சை அவனை கொண்டு போய் வேதப்பள்ளிக்கூடத்தில் சேர்ப்பித்து ஏன் தெய்வக்குற்றத்திற்கு என்ர பிள்ளை ஆளாவான் அதுவுமில்லாது அவன் தெய்வத்தின்ரை பிள்ளை என்றதாலைதான் சைவப்பள்ளிக்கூடத்தில் சேர்ப்பித்தனான் என்று புதியதொரு வியாக்கியானம் கூறுவாள்.

ஒருவனின் வாழ்க்கையை தீர்மானிப்பதில் அவன் வாழுகின்ற சுற்றுச்சூழல் ஆதிக்கம் செலுத்துகின்றதென்னும் சமூகவியல் அறிஞர்களின் கருத்துக்களை மெய்ப்பிப்பதாக சிவசண்முகவிநாயகத்தின் கல்வி சார்ந்த வாழ்வு அமைந்துவிட்டது அக்கால கட்டத்திலான ssc வகுப்பிலே நல்ல பெறுபேறு எடுத்துக்கொண்ட நிலையிலும் பின் சேரக் கூடாத கூட்டத்துடன் சேர்ந்து செய்யாத திருக்கூத்துக்களை எல்லாம் செய்து HSC வகுப்பிலே, எதிர்பார்த்தளவிற்கு தனது கல்விப்பெறுபேற்றினை அடைந்திட முடியவில்லை

அத்தருணத்தில் இவனுக்கு இதன் தாக்கம் புலப்படாதவையாக இருந்த போதிலும் காலம் செல்ல செல்ல தனது தவறினை உணர்ந்து வேதனைப்பட்டு கொண்டிருப்பது தொடர்கதையாகியது. தன்னிலும் குறைந்த பெறுபேற்றினைப்

பெற்றவர்கள் தமது பெற்றோர் உறவினர் நண்பர்களுக்குரிய உயர் மட்டத்திலான செல்வாக்கினை பயன்படுத்தி உயர்த்திவிட்டனர் ஆனால் இவனுக்கும் இவனது குடும்பத்திற்கும் அத்தகைய செல்வாக்கு நிலையில் பஞ்சநிலமை காரணமாக அரச தொழில் பெற முடியாதவனாகினான் இதையிட்டு அவன் துயரடைந்த போதிலும் தனக்கு அரச நியமனம் கிடைக்கவில்லை கிடைக்க எவரும் உதவவில்லை ஆனால் நியமனம் கிடைத்தவர் பட்டியலில் பெயர் வந்தவரின் பெயரை மனித வாழ்வில் மேலுள்ளவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டுமே என்பதனைக்கூட கருத்தில் கொள்ளாது உரியவரின் பெயரை வெட்டி அவ்விடத்தில் உறவினரின் பெயரை போட்ட ஈனச்செயலை செய்தமையால் பாதிக்கப்பட்டவனின் மனநிலையை காட்டிலும் நான் ஓரளவுக்கு பரவாயில்லை எனவும் நினைத்துக் கொள்வதுமுண்டு

இவனுடைய பெற்றோர் தேடிய வளவுகளின் வருவாயை கொண்டே இவனுடைய வாழ்வு கழிந்தன. நில புலத்தை பண்படுத்தி பயிர்ச்செய்கையில் ஈடுபடலானான். நாட்டில் நிலவிய பொது நிலைப்பாட்டினால் விவசாய செய்கையிலும் செய்கை பண்ணப்பட்டவற்றை விற்பதிலும் பெருமிடர் ஏற்பட்டதனால் விவசாய முயற்சியை கைவிடவேண்டியதாயிற்று.

இவன் ஒரேயொரு பிள்ளை என்பதாலும் பெற்றோர் நிலபுல காரர்கள் என்பதனாலும் பொருளாதார கஸ்டத்தை அனுபவிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

ஊரில் பலர் இவனின் சொத்துப்பத்துக்காகவே தம் பிள்ளைகளை பெண் கொடுக்க முன்வந்தனர் ஆனால் செல்லம் தனது மகன் தனித்தவன் அதிலும் அவனுக்கு மூக்கை பிடித்தால் வாயை திறக்கத் தெரியாதளவிற்கு தன்னுள் பொத்திப் பொத்தி வளர்த்துவிட்டேன். என்பதால் நன்மை தீமைகளையும் சுகதுக்கங்களை தாங்கித்தரித்து சகித்துப் போகக் கூடிய ஒருத்திக்குத்தான் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் உறுதிப்பாட்டுடன் காணப்பட்டார்.

அக் காலத்தில் வழக்கிலிருந்தது போல திருமண வயதை அடைந்தவர்கள் பெற்றோர் காட்டுகிறவருக்கே வாழ்க்கைப் பட்டுக் கொள்கின்ற முறைமைக்கமைவாக இவர்களது திருமணமும் நிறைவேறியது.

இவனுக்கு ஒன்றன் பின் ஒன்றாக ஆறு குழந்தைப் பேறு கிட்டியது கால ஓட்டத்தில் இவனின் ஐயாவும் அம்மாவும் வயது முதிர்வினால் ஒருவரைத் தொடர்ந்து ஒருவராக இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டதனால் நிகரில்லாத நிரப்பப்படமுடியாத அவ்வெற்றிடங்களை நினைத்து பெருந்துயரப்பட்டான்.

நாட்டில் நிலவிய பொருளாதார கட்டமைப்பு தாக்கத்தினாலும், ஏகபோக வாழ்வுக்குட்பட்டவர்களின் பலம்மிக்க அடித்தளங்கள் ஆட்டம் காண தலைப்பட்ட தருணத்தில் அம் மட்டத்தையே எட்டிப் பார்க்காத சிவசண்முகவிநாயகத்தின் வாழ்வு எந்த மட்டத்திற்கு பொது நிலைப்பாட்டினால் இவனுடைய குடும்பத்திலும் வறுமை என்பது தாண்டவமாடத் தொடங்கியது.

நிரந்தரமான தொழில் கிடைக்காதமையால் இதுவரையும் முதலாளியாகவும் தொழிலாளியாகவும் தனது புலத்தில் தொழிற்பட்டவன் வெளியுலகிற்கு கூலியாளனாக அடையாளம் காணப்பட்டான். மேசன்வேலை, தோட்டவேலை, வேலியடைப்பு, விறகு கொத்தல் எனப் பலதும் பத்துமெனப்போய் தனது குடும்பத்தின் நாளாந்தக் கஞ்சித்தேவையை கவனித்துக் கொண்டான். தான் எத்தகைய கஸ்டத்தையும் அனுபவித்தாலும் தன்னை நம்பி வந்தவளுக்கும் தான் பெத்த பிள்ளைகளுக்கும் வேண்டியவைகளை கொடுக்க வேண்டியது தன்னுடைய தார்மீகப்பொறுப்பு என்பதை இவனது ஆழ்மனது வலியுறுத்தி வந்ததுடன் தனது பிள்ளைகளை எப்பாடுபட்டேனும் படிப்பித்திட வேண்டுமென்பதில் அசைக்கமுடியாத உறுதிப்பாட்டுடன் இருந்தான்.

இவனது குடும்ப நிலைமையையும், கல்வி நிலையையும் கருத்தில் கொண்ட அப்பகுதி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கற்றோரை கற்றோரே காமுறுவர் என்பதற்கமைவாக தனது தலைமைத்துவத்திலான சங்கத்தில் தற்காலிகமானதொரு எழுதுவினைஞர் தொழிலில் இவனை இணைத்துக் கொண்டார் இவன் கூட்டுறவு சங்கத்தில் இணைக்கபட்ட போது கூட்டுறவு தொடர்பிலானவை தெரியாதவனாக இருந்தான்.

சங்கத்தின் தலைவர் கூட்டுறவு தொடர்பில் பல அறிஞர்கள் பல விதமான வியாக்கியானங்களை கொடுத்திட்ட போதிலும் சாத்வீகவாதியான மகாத்மாகாந்தி அவர்களினால் கூறப்பட்டதான "வலுவிழந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் சேவையளிப்பதே கூட்டுறவு" என்கின்ற உயரிய பண்புதனை தன்னுள் உள்வாங்கியவராக சங்கத்தின் தலைவரான அதிபர் சோதிலிங்கத்தின் இச்செய்கை இவனுடைய எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதனை அன்றைய பொழுது அவன் அறிந்திருக்கவில்லை.

இதுவரை கூலித்தொழிலின் நிமித்தம் தினமும் ஆத்துப்பறந்து வெயிலிலும் மழையிலும் நாளாந்தம் கஷ்டப்பட்டுழைத்தவனுக்கு ஓரிடத்திலிருந்து எழுத்துக்கணக்கு வேலை பார்ப்பது ஆறுதலாகவிருந்தது ஆனால் அங்கு வழங்கப்படுகின்ற வேதனம் அவனுடைய குடும்பத்தின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்வதற்கு போதுமானதாக இருக்கவில்லை என்ன செய்வது எமது தேவைக்காக எந்த நிறுவனமும் சம்பளத்தை நிர்ணயிக்கவோ வழங்கவோ முடியாது தானே?

கூட்டுறவு சங்கத்தின் சம்பளம் போதாதிருந்தமையால் தனது ஐயாவும் அம்மாவும் தேடிவைத்த தாராளமான தோட்டக்காணிகளில் கடும்பிராயத்தனங்களுக்கு மத்தியில் மனைவி கல்பனாவின் பக்க துணையுடன் செய்கைக்கு உட்படுத்தி

அதனால் கிடைக்கும் வருமானத்தினையும் வைத்து இவர்களது குடும்பம் சுமாரான வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தனர்.

காலங்கள் மிக விரைவாக கழிந்தன. தற்காலிகமாக கூட்டுறவுச் சங்கத்தில் புகுந்து கொண்டவனுக்கு அவனின் விசுவாசமான வேலைத்தரத்தினாலும் நாகரிகமான தொடர்பாடல் முறையாலும் பதவி நிரந்தரமாக்கலுடன் கூட்டுறவு பணியாளர்களுக்குரிய தராதரப்பத்திர பயிற்சி நெறிகளுக்கு அனுப்பி வைத்து நல்ல பெறுபேறு பெற்றதனால் கணக்காளராக பதவியுயர்வு செய்து கொள்ளப்பட்டான்.

கூட்டுறவு சங்கத்தை பற்றி எதுவும் தெரிந்திராதவராக பணிக்கு வந்த சிவசண்முகவிநாயகத்திற்கு கூட்டுறவு இயக்கமானது இங்கிலாந்தில் ஆரம்பித்து இன்று உலகிலே மக்கள் நிறுவனமாக பரிணமித்துள்ளதையும் கூட்டுறவின் பிதாவான "றொபேர்ட் ஒவன்" என்பவர் கூட்டுறவு தொடர்பில் "மனிதகுலம் தமது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றிட கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின்பற்றி பயன்பெற முடியும். தொடர்ந்து பின்பற்றுவது தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் நலத்தைக் கொடுக்கும் இக் கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் சமூக அநீதிகளையும் சுரண்டல்களையும் ஒழித்து நீதியும் அறமும் சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பொன்றை உருவாக்க வழிவகுக்கும்" என்ற கருத்தில் பொதிந்துள்ள தீர்க்க தரிசனமான உண்மைகளையெல்லாம் நேரிடையாக தனது வாழ்வில் கூட்டுறவின் மூலமாக பெற்றுள்ளமையை நினைத்து பல பொழுதுகளில் நெஞ்சம் நெகிழ்ந்துள்ளார்.

இவனிடம் ஏராளமான கெட்டித்தனங்கள் இருந்தும் தொழிலை வைத்து சமூக மட்டத்தில கெட்டித்தனமில்லாதவன்

எனக்கணிக்கப்பட்டமையை உணர்ந்திட்ட தருணங்களில் இவனுள்ளம் கொல்லாமல் கொல்லும் நெருடலிலிருந்து தன்னை விடுவிக்கப்பட வேண்டுமென்றால் தனது பிள்ளைகளை கல்வியின் ஊடாக உயர்நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும் அதற்காக தான் எத்தகைய கஷ்டத்தையும் அனுபவிக்கத்தயாரானான் பிள்ளைகளை பாடசாலைக்கும் ரியூசனுக்குமென ஏற்றியிறக்குவதுமாக தனது நாளாந்த வேலை ஒழுங்குகளைத் திட்டமிட்டுத் தயார்ப்படுத்திக் கொண்டான். அது மட்டுமன்றி தனது வேலைத்தளத்திலும் நேர காலம் பாராது கடமைதனை செவ்வனே நிறைவேற்றி வந்தான்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார தட்டுப்பாடு என்கின்ற அரக்கனுக்கு இவனுடைய குடும்பமும அகப்பட்டமை வியப்புக்குரியதொன்றல்ல. அத்தியாவசிய பொருட்களை கண்டுகொள்வதே இறைவன் நேரில் வந்து தரிசனம் கொடுத்தது போலானது சீனி கிடைப்பது சீமைக்கு சென்று வருவதற்கு சமனாகும். காலைப் பொழுதில் பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளுக்கு கால் வயிறு அரை வயிறாக அவர்களை கவனித்து விட்டு தாயும் தகப்பனும் வெறும் வயிறாக்கியதுதான் வழமை அதிலும் காலை உடல் உற்சாகத்திற்கென குடிக்கின்ற தேத்தண்ணியை மனைவியும் இவனும் கையில் சிறுபருக்கை சீனித்துகள்களை உள்ளங்கையில் போட்டு நக்கியே குடித்துக் கொள்வார்கள் அதிலும் சீனி இல்லாத பொழுதில் வெறும் சாயத்தண்ணீர் குடிப்பதுமுண்டு.

காலம் காலமாக கூட்டுறவு சங்கத்தில் நிலவுகின்ற பாரம்பரிய உபசரிப்பு நிகழ்வான காலை 10.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் வழங்கப்படுகின்ற தேநீரை எதிர்பார்த்திருந்த அனேக கூட்டுறவுப் பணியாளர்களினுள் இவனும் ஒருவனே இந்நிலைமை பொருளாதார நலிவுற்ற குடும்பத்தை சார்ந்த பணியாளர்களிடையே காலம் காலமாக தொடர்கின்றமை நடைமுறையிலுள்ள ஒன்றாகும்.

அனேகமாக காலையில் சாப்பிட ஒன்றுமிருப்பதில்லை அவ்வாறு ஏதாகிலும் ஒரு சந்தர்ப்பதில் உண்ண ஏதாவது கிடைத்திட்டாலும் பிள்ளைகளை உரிய நேரத்திற்கு பாடசாலையில் கொண்டு சென்று விட்டிட வேண்டும் எனும் அந்தரத்தில் சாப்பிடாது விட்டுவிட்டு செல்கின்றமை வழக்கமான ஒன்றாகிவிட்டது.

காலம் பொன்னானது என்பதற்கமைவாக நேர முகாமைத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து தனது நாளாந்த கருமத்தை முன்னெடுத்து வந்தான். வெள்ளாப்புடன் தோட்டத்தில் வேலையும், அதிகாலைப்பொழுது சந்தைக்கும் சென்று தம் தோட்டத்தில் விளைந்தவைகளை விற்றும் வீட்டுக்குத் தேவையானவைகளை வாங்கிக் கொண்டு வந்து வீட்டிலுள்ள தொட்டாட்டு வேலைகளுடன் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்குரிய ஒழுங்குகளை அசுர வேகத்துடன் செய்து முடித்து தானும் சங்கத்திற்கு உரிய நேரத்திற்கு சென்று தன் கடமையை மேற்கொள்வான்.

இவனுடைய ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைகளினாலும் சங்கத்தின் மீதும் கொண்டுள்ள விசுவாசத்தினையும் கருத்தில் கொண்டும் இவனுக்கிருந்த கூட்டுறவுத்துறை சார்ந்த சட்டங்கள், விதிகள், கொள்கைகள், தீர்மானங்கள் எடுத்தல் அவைகளை அமுல்படுத்தல் என்னும் சங்க நிர்வகிப்புத் தொடர்பான சகல விடயப்பரப்பினுள்ளும் போலிவேடம் தாங்கிடாது போதியளவு தெளிவுத்தன்மையும் கொண்டிருந்தமையை அளவீடு செய்து கொண்டிருந்த வினைத்திறன் மிக்கதான சங்க நிர்வாகத்தினர் இவனை பொதுமுகாமையாளராக பதவி உயர்த்திக் கொண்டனர்.

ஏற்கனவே சங்கத்தின் செயற்பாட்டில் நேசிப்புடனான ஈடுபாடு கொண்டிருந்தமையால் பதவி உயர்வின் பின்னர் தனது பதவிக் காலத்தில் சங்கத்தை சகல வகையிலும் முதன்மையாக்கிடல் வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக

இருந்து விசுவாசத்துடன் கால நேரம் பார்க்காது பலவகையான திட்டங்களை நிர்வாகிகள் ஒத்துழைப்புடன் முன்னெடுத்துக் கொண்டான் இத்தகைய நிலைமையினால் இவனுக்கு கூட்டுறவுத்துறையுடன் தொடர்புடைய சகல மட்டங்களிலிருந்தும் இவனின் ஆளுமைக்கும் சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைக்கின்ற ஏனைய பணியாளர்களையும் சங்கத்தின் தலைவர் செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் பாராட்டி விதந்துரைத்துக் கொண்டனர்.

பிள்ளைகள் எல்லோரும் தம்முடைய தாயும் தந்தையும் தமது சிறந்த எதிர் காலத்திற்காக அயராது பாடுபடுவதை மனங்கொண்டவர்களாக நல்லதையே சிந்தனையில் கொண்டு கல்வியில் பேரூக்கம் எடுத்துக்கொண்டதனால் சகல மட்டத்திலுமான பரீட்சைகளிலும் அதிசிறப்பு சித்திகளை பெற்றுக் கொண்டனர். இதுவரை இவனையோ இவன் குடும்பத்தையோ கவனத்தில் எடுத்திடாத ஊரவர், உறவினர் இவனின் பிள்ளைகள் ஆட்பட்டு படிப்பில் உயர்நிலை நோக்கிய பயணிப்பு மேற்கொள்வதனால் இவர்களுடன் வலிந்து வந்து அன்னியோன்னியம் ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் எல்லாம் கடந்த காலங்களில் எம்முடன் எவ்வாறு நடந்து கொண்டனர் எவ்வாறெல்லாம் எம்மைக் கணித்துக் கொண்டனர் என்பதனை தெரிந்திருந்த நிலையிலும் வீடு தேடி வந்த வலிந்து உறவு கொண்டாடுபவர்களை புறம்தள்ளிட முடியாதிருந்தது சிலதை கண்டும் காணாது நடந்திடல் வேண்டுமென இவனது பக்குவப்பட்ட மனம் தீர்மானித்தது.

இவன் சங்கத்தின் மீது கொண்ட விசுவாசத்தினால் சங்க நிர்வாகிகள் ஓய்வுக்குரிய 60 வயதின் பின்னரும் சில ஆண்டுகள் கடமையாற்றுமாறும் அதற்குரிய அனுமதியை தொடர்புடைய திணைக்களத்திடம் சங்கத்தினுடைய அபிவிருத்தி நிலைமையினை தாமாக சுட்டிக்காட்டி அங்கீகாரத்தினை பெறுகின்றோம் எனும் கோரிக்கையினை ஒன்றுக்கு மேற்பட்ட

தடவைகள் முன்வைத்த போதும் ஓய்வுத் திகதிக்குரிய நாளின் பின்னர் ஒரு கணப்பொழுதும் சட்டவரன் முறைக்கு மாறாக கடமை புரியப்போவதில்லை. எனக்கு அடுத்த நிலையிலுள்ளவர்க்கும் உரிய காலத்தில் சந்தர்ப்பம் கொடுக்கப்படல் வேண்டும் அதை விட்டுவிட்டு சிலர் நானில்லையென்றால் சங்கத்தை தொடர்ந்து நடத்த முடியாது சங்கம் படுத்துவிடும் அதற்கு பின்னர் நிமிர்த்த முடியாது எனிவருகின்றவர் இயலுமானால் நடத்திப்பார்க்கட்டும் என்கின்ற யதார்த்தமில்லாத பசப்பு வார்த்தைகளை இம்மியளவும் மனங்கொள்ளாது சந்தர்ப்பம் கிடைப்பதுதான் அருந்தல் சந்தர்ப்பாம் கிடைத்துவிட்டால் ஒவ்வொருவரும் தமக்குள் மறைந்துள்ள அடிப்படைத் திறமைகளை வெளிக்கொணர்ந்து தமது செயற்திட்டங்களை முன்னெடுத்துக் கொள்வது இயல்பு ஒரு சிலர் புறநடையாக அபிவிருத்தி செயற்பாடுகளை இருந்ததைக் காட்டிலும் நாசம் செய்து விடுவதுமுண்டு எது எவ்வாறுயிருப்பினும் எமது சங்கத்தில் அடுத்த நிலையிலுள்ளவர் என்னைக்காட்டிலும் சங்கத்தை, திறம்பட நடாத்தக் கூடியவர் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை என்பதனால் தனது ஓய்வு தினத்தன்று சங்கப்பணியிலிருந்து விலகிடத்தக்கமுறையில் தனது கடமைப்பொறுப்பினை உரியமுறையில் உரியவரிடம் கையளித்து கொண்டான்.

அன்றைய தினம் சங்கத்தினர் இவனுடைய சேவையை பாராட்டி விழா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தனர். இவ் விழாவிற்கு இவருடைய மனைவி கல்பனாவையும் அழைத்திருந்தனர் சிவசண்முகவிநாயகம் அவர்கள் கூட்டுறவு சேவையில் செய்து கொண்ட எண்ணிலடங்காத பணிகள் தொடர்பில் விதந்துரைத்துக் கொண்டனர். அநேகமானவர்கள் இவரது சிறப்பான சேவைக்கு மூலமானவர் இவரது மனைவியே எனக்கருத்துரை வழங்கினர்.

எல்லோராலும் "மனேச்சர்" என அழைக்கப்படுகின்ற சிவசண்முகவிநாயகம் தனது ஏற்புரையில் இதுவரை காலமும் எனக்கும் எனது குடும்பத்திற்கும் வாழ்வளித்த கூட்டுறவு சங்கத்தினையும் அதன் செயற்பாட்டு அங்கமாக

பணிப்பாளர்களையும், பணியாளர்களையும் நன்றிப் பெருக்குடன் மனங்கொள்கின்றேன். காட்டிலும், மேட்டிலும், கல்லிலும், முள்ளிலும், வெயிலிலும், மழையிலும் உள்ளத்தையும் உடலையும் வருத்தி உழைத்திட என்னை வெருண்டொடுங்கிட்ட நிலைதனில் கையில்பிடித்து வந்து கூட்டுறவு சங்கத்தில் பணிக்கமர்த்தி எனது வாழ்க்கைப் பயணிப்புக்குத் திருப்பு முனையாக இருந்த எனது கண்கண்ட தெய்வமான அதிபர் சோதிலிங்கம் அவர்கள் தற்போதயை எமது குடும்பத்தினுடைய முன்னேற்றத்தினை கண்டு மகிழ கொடுத்து வைக்க வில்லையே எனக்கூறும் போது அவரது கண்களிலிருந்து நீர்பனித்தன. மனம் தளதளித்து கொண்டது. அவர் எனக்கு மட்டும் வாழ்வளிக்கவில்லை பொதுநல நோக்கில் என்னைப்போல பலருக்கு விடிவெள்ளியாக இருந்துள்ளார் என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். கூட்டுறவு தொடர்பில் சாத்வீகவாதி மகாத்மாகாந்தி கூறிய "வலுவிழந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் சேவையளிப்பதே கூட்டுறவு" என்னும் கூற்றினை நடைமுறை வாழ்வில் கடைப்பிடித்து வாழவழி அமைத்துக் கொடுத்திட்டவர் அத்துடன் எனது சேவைக்காலத்தில் என்னுடன் சகல வழிகளிலும் ஒத்துழைத்துக் கொண்டவர்களையும் நன்றியுணர்வுடன் மீண்டும் மீண்டும் மனதில் கொள்கின்றேன். எனக்கூறி தனதுரையை முடித்துக் கொண்டு ஆணவமற்றவராக மனநிறைவுடன் ஓய்வு காலத்தினை மகாத்மாகாந்தி அவர்களின் கூற்றை அதிபர் சோதிலிங்கம் அவர்கள் நடைமுறைப்படுத்தியது போல அதன் வழியே ஏற்கனவே தன்னால் வரைபு செய்யப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் சிந்தனையுடன் மனைவியையும் ஏற்றிக்கொண்டு சிவசண்முகவிநாயகத்தின் வண்டி வீட்டினை நோக்கி பயணித்தது.

கணகிருஸ்ணராஜன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடமாகாணம்.

நன்றி நவில்கின்றோம்

இன்றைய தினம் யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு கற்பகதீபம் என்னும் மலர் வெளியிடப்படுகின்றது.

கற்பகதீபம் மலரானது இந்து, கிறிஸ்தவ மதகுருக்களின் ஆசிச் செய்திகள், வடமாகாண கூட்டுறவு அமைச்சர் மற்றும் துறைசார்ந்தோரின் வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, சங்கவரலாறு, வரலாற்றுப்பதிவுகள், விளம்பரங்கள் என்னும் அம்சங்களை தாங்கி வெளிவருகின்றது.

கற்பகதீபம் சுடர்விட்டுப் பிரகாசிப்பதற்கான ஆசிகளையும், வாழ்த்துக்களையும், ஆக்கங்களையும் வழங்கி உதவியவர்களிற்கும், மலரின் முன் அட்டைப்படத்தினை அழகுற வடிவமைத்த திரு. பா. சித்திரவடிவேல் (வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்) அவர்களிற்கும் மலர் சிறப்பாக வெளிவர உதவிய மலராசிரியர்கள் திரு.N.B. ஜெயராசா, திரு.வ.சிவகுமார், மற்றும் திரு.சு.சிவலிங்கம் ஆகியோருக்கும் வெளியீட்டின்போது முதன்மைப் பிரதி, சிறப்புப் பிரதிகளைப் பெற்றுச் சிறப்பித்த அனைத்து அன்புள்ளங்களிற்கும் இம் மலரினை அழகாக அச்சிட்டு வழங்கிய அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணத்திலுள்ள அம்ஷா பதிப்பகத்தினரிற்கும், எம்முடன் காலமொல்லாம் தோளோடு தோள் நின்று உதவிடும் கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் மலர்குழுவினராகிய நாம் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி!

அன்புடன்,
மலர்குழு.

கற்பக தீபம் 10ஆவது ஆண்டு சிறப்பாக மலர எமது வாழ்த்துக்கள்

சமாசப் பதிப்பகம்

சகலவிதமான வருடாந்த நாட்காட்டிகள், நினைவு வரலாற்று நூல்கள், அழைப்பிதழ்கள், விளம்பர பிரசுரங்கள், லேபிள்கள், மற்றும் அனைத்து விதமான தனி வர்ண, பல வர்ண அச்சு வேலைகளையும் அழகாக கணனியில் வடிவமைப்பு செய்து, கோர்ட் மற்றும் ஹைடா ஒவ்செற் இயந்திரங்கள் மூலம் தரமான முறையில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



டிஜிற்றல் நிழற்படப் பிரதி

நலன்புரிக் திட்டங்கள்

ஓய்வூதியம் வழங்கல்
விபத்து நிதி வழங்கல்

கல்வி ஊக்குவிப்பு

பாம் கோப் சிற்றி
பனை தென்னை வள
உற்பத்திகள் மற்றும்
அனைத்துவிதமான
காகிதாதி
உபகரணங்கள்
விற்பனை

கணனிப் பயிற்சியளிப்பு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ - து)

இலக்கம் 52,
சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி.

T.P/ Fax : 021 222 5072

Ashleigh Hughes
Illustrations and Design
073 804 7990